உலகப் பெரும்

தீர்க்கதரிசிகள்

பி. சி. கணேசன்

வானதி
பதிப்பகம்

உலகப் பெரும் தீர்க்கதரிசிகள்

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி., பி. டி.

வானதி பதிப்பகம்
தி. நகர் • சென்னை • 17

உலகப் பெரியோர் வரிசை ; 4
முதற் பதிப்பு : 1971
இரண்டாம் பதிப்பு : ஜூன் 1978
மூன்றும் பதிப்பு : அக்டோபர் 1981

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 3—00

பொருளடக்கம்

நாதன் அன் கம்பெனி, வேளச்சேரி, சென்னை-42.

முன்னுரை

‘உலகப் பெரியோர் வரிசை’ என்கிற தொடரில் வெளியாகும் நூல்களில் இதுவும் ஒன்று. உலகத்தில் வாழ்ந்த பல்துறை அறிஞர் பெருமக்களின் வாழ்க்கையினை அனைவருக்கும் பயன்படும் வகையில்—குறிப்பாக மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பயன்தரத்தக்க வகையில்—எழுத வேண்டுமென்ற ஆவல் எனக்கு நீண்ட நாட்களாக உண்டு. இந்த எண்ணத்தை எனது இனிய நண்பரும் வானதி பதிப்பக உரிமையாளருமான திரு. திருநாவுக்கரசு அவர்களிடம் நான் வெளியிட்டபோது இந்த வரிசை நூல்களை வெளியிட அவரும் மகிழ்ச்சியுடன் முன்வந்தார்.

விஞ்ஞானம், இலக்கியம், கலை, அரசியல், நிர்வாகம் ஆகிய பல துறைகளிலும் மேதைகளாக வாழ்ந்து சாதனைகள் புரிந்த பெருமக்களின் வாழ்க்கையினை அனைவருமே அறிந்து பயன் பெறுவது அவசியம். இவர்கள் அனைவருடைய வாழ்க்கையிலும் ஒரு பொதுத்தன்மை உண்டு. அதுதான் அவர்களுடைய சலியாத உழைப்பு, அவர்களுடைய வாழ்க்கை வெற்றிக்கும் அவர்களிடமிருந்த விடாமுயற்சியே காரணம்.

காலத்தின் பாதையில் அந்தப் பெரியார்கள் விட்டுச் சென்றுள்ள அடிச்சுவடுகள் இன்றைய தலைமுறையினருக்கு வழி காட்டிடும் லட்சியச் சுவடுகள். அந்தச் சுவடுகளைத் தொடர்ந்து இப்போதுள்ள இளைய தலைமுறையினர் தங்களுடைய வாழ்க்கைப் பயணத்தைத் தொடருவார்களேயானால் மனித சமுதாயத்தின் எதிர்காலமே ஒளிமயமானதாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

அறிவுத் துறைக்கு அழகான புத்தக வெளியீடுகளின் மூலம் சேவை செய்துவரும் நண்பர் திருநாவுக்கரசு இந்த வரிசையினையும் அவருடைய செயல் திறத்திற்கு உகந்த வண்ணம் அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இம் மாதிரி முயற்சிகளில் சேவையினையும் கருத்தில் கொண்டு ஈடுபடும் நல்ல பண்பாளர் அவர். மேலும் இம்மாதிரி முயற்சிகளில் ஈடுபட அவருக்கு ஆர்வம் ஊட்ட வேண்டியது தமிழ்ச் சமுதாயத்தின் கடமை ஆகும்.

நல்ல முயற்சிகளுக்குத் தமிழர்களின் ஆதரவு எப்போதும் உண்டு என்பதில் அசையாத நம்பிக்கை உடையவன் நான். இந்தப் புத்தகங்கள் எல்லா நூல் நிலையங்களிலும் இடம் பெறுவதோடு இளைஞர்கள் கரங்களையும் அலங்கரிக்கும் என எதிர்பார்க்கிறேன். குறுகிய காலத்தில் இந்த நூல்களை சிறப்பாகக் கொண்டுவந்துள்ள திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் நன்றி செலுத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

மயிலாப்பூர்,
5—8—71.

அன்புள்ள,

பி. சி. கணேசன்

கௌதம புத்தர்

(கி. மு 560—கி. மு. 480)

இந்திய சரித்திரத்தில் இணையற்ற இடத்தைப் பெற்றிருப்பவர் கௌதம புத்தர். சாக்கிய வம்சத்தில் மன்னனாகப் பிறந்து, மணிமுடி துறந்து தவக் கோலம் பூண்டு, போதி மரத்தடியில் அவர் ஞானம் பெற்ற வரலாறு மெய் சிலிர்க்க வைக்கும் வரலாறு.

உலகத்தின் துயரங்களை மகன் அறியக் கூடாது எனக் கௌதமரின் தந்தை அவரை, போக மாளிகையில் சிறைப்படுத்தினார். ஆனால், கௌதமரோ யோகவழியிலேயே நாட்டம் கொண்டவராக அழகிய மனைவி யசோதாவினையும் அருமைக் குழந்தை ராகுலனையும் விட்டுவிட்டு உலகத்தின் துயரம் களையும் மார்க்கத்தைக் காணுவதற்காக நடு நிசி ஒன்றில் காட்டுக்குப் புறப்பட்டுப் போனார். அப்போது அவருக்கு வயது இருபத்தொன்பது. அன்று அவர் தொடங்கிய பயணம் உலகத்தின் மதவழிச் சிந்தனையில் பெரியதொரு மாற்றத்தினையே ஏற்படுத்தியது.

அன்பு மனைவியையும் அருமைக் குழந்தையையும் பிரிந்து காட்டுக்குப் புறப்பட்டுச் செல்லுவது அவருக்குச் சுலபமாக இருக்கவில்லை. வாழ்க்கையின் ரகசியங்களைக் கண்டறிய வேண்டும் என்கிற பேராவலால் உந்தப்பட்டவராய்க் கடுமையான மனப் போராட்டத்துக்குப் பிறகு அரச போகத்தை

யும் அன்புக் குடும்பத்தையும் துறந்து வெளியே புறப்பட்டார்.

வீட்டை விட்டு வெளியேறுகின்ற அந்தக் கடைசி நிமிடத்திலேகூட மனைவியின் அழகு முகத்தையும் அன்புக் குழந்தையினையும் கடைசித் தடவையாக ஒரு முறை பார்த்துவிட்டுத்தான் புறப்பட்டார். அப்படிப் பார்த்த போது அப்போது தான் பிறந்திருந்த தனது பச்சிளங்குழந்தையை மார்போடணைத்து மகிழ வேண்டுமென்கிற ஆசை அவருடைய உள்ளத்தில் எழுந்தது. குழந்தையைத் தீண்டினால் மனைவி விழித்துக்கொண்டு அதனால் தம்முடைய லட்சியப் பயணமே தடைப்பட்டுப் போய்விடும் என்று பயந்த அவர், அந்த ஆசையினை வென்று, மெதுவாக மாளிகையிலிருந்து வெளி யேறி, குதிரையின்மீது அமர்ந்து, இருளில் சென்று மறைந்தார்.

மணிமுடி தரிக்க வேண்டிய மன்னன் மாபெரும் துறவியாகி ஞான மார்க்கம் கண்ட கதை இப்படித்தான் ஆரம்பமாயிற்று.

2

கங்கைச் சமவெளியின் காடு வனாந்தரங்களி லெல்லாம் அலைந்து திரிந்தார். விந்திய மலைச்சார லில் உலாவினார். தக்காணத்திலுள்ள உருவேலா என்னும் காட்டில் ஆறு ஆண்டுகள் கடுமையான தவம் புரிந்தார். தலையை மொட்டை அடித்துக் கொண்டு, காவி உடை தரித்து, சந்நியாசிகளோடு

சந்நியாசியாய்க் காலம் கழித்தார். விரதங்கள் இருந்தும் உடலை வருத்தியும் உண்மைகளைக் காண முயன்றார். மெய்யான துறவி என்கிற மரியாதை மக்களிடத்திலே அவருக்கு ஏற்பட்டதே தவிர அவர் காண விரும்பிய உண்மைகளை அவரால் கண்டறிய முடியவில்லை. ஒரு நாள், மயக்க நிலையிலிருந்து அவர் கண்விழித்த போது, ஒளி மயமாக ஞானம் அவருடைய மனத்தில் மின்னல் போல உதயமாயிற்று. காடுகளில் அலைந்து திரிவதோ, கனி கிழங்கு புசித்துக் கடுந்தவம் புரிவதோ, உடலை வருத்திக்கொள்ளுவதோ உண்மையைக் காண உதவி செய்யாது என்கிற முடிவிற்கு வந்தார். பகுத்தறியும் பண்பும், குழப்ப மற்ற சிந்தனைகளை வகைப்படுத்தி முடிவுகளுக்கு வருவதும், தெளிந்த அனுபவமும் உண்மையைக் காணத் தேவை என்றும், இவை அமைய ஒவ்வொரு மனிதனும் உடல் நலத்துடன் கூடிய தூய வாழ்க்கை வாழ வேண்டுமெனவும் அவர் உணர்ந் தார்.

தாம் கண்டறிந்த உண்மைகளைத் தம்மு டைய ஐந்து சீடர்களிடத்திலும் தெரிவிப்பதற்காக விரைந்து ஓடினார். தவ வாழ்க்கையால் பயனில்லை எனக் கோரும் அவருடைய புதிய சிந்தனையைக் கேட்ட அவருடைய சீடர்கள் அதிர்ச்சி அடைந்தார் கள். அவர்மீது நம்பிக்கை இழந்து அவரை விட்டுப் பிரிந்தும் சென்றார்கள். தனிமையில் விடப் பட்ட கௌதமர், கயாவிலிருந்த காடுகளிலெல்லாம் சுற்றி, நிரஞ்சாரா நதிக்கரையினை வந்து அடைந் தார். அங்கே இருந்த போதி மரத்தடியில் அமர்ந்து

சிந்தனையில் ஆழ்ந்தார். துறவுக் கோலத்தில் ஒருவர் அமர்ந்திருப்பதைப் பார்த்த பெண் ஒருத்தி, ஒரு குவளையில் பால் கொண்டுவந்து அவருக்குக் கொடுத்தாள். அதை உண்டு அவர் புதிய உற்சாகத்துடன் தமது பணிகளைத் தொடர்ந்தார். அந்த மரத்தினடியிலேயே அமர்ந்து கடுமையான சிந்தனைகளில் மூழ்கிப்போனார். தோல்வியின் பாதாளத்திலிருந்து நம்பிக்கையின் உச்சி வரை பல்வேறு வகையான உணர்ச்சிகளை அவர் அனுபவித்தார். ஆன்மிக வேதனைகள் அனைத்தையும் அனுபவித்த பிறகு, அவர் தேடியலைந்த அமைதி அவருக்குக் கிட்டியது. உண்மை பளிச்சென்று உதயமாயிற்று. கௌதமர் ஞானம் பெற்றுப் புத்தர் ஆனார்.

ஞானம் பெற்ற மகிழ்ச்சியில் தமக்குள்ளாகவே சிறிது காலம் அவர் திளைத்திருந்தார். உலகத்தின் பந்த பாசங்களைத் துறந்து ஞானம் பெற்ற மகான், தாம் கண்டவைகளைத் தமக்குள்ளாக வைத்துக் கொண்டிருப்பது சாத்தியமாக இருக்கவில்லை. தாம் கண்ட மெய்ஞானத்தை மற்றவர்களுக்கும் போதிக்கக் காசி நோக்கிப் புறப்பட்டார்.

காசி நகரத்தின் எல்லையில் தம்மைக் கைவிட்டுச் சென்ற சீடர்களை மீண்டும் சந்தித்தார். அவருடைய உபதேசங்களில் அவர்கள் நம்பிக்கை பெற்றார்கள். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்து அவர்களுடைய சந்தேகங்களைப் போக்கினார். காசியிலேயே தங்குவதற்கு இடம் ஒன்றை அமைத்துக்கொண்டு தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் தாம் கண்ட உண்மைகளை உபதேசித்தார் புத்தர்.

நான்கு மகத்தான உண்மைகளே எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டுமென்று புத்தர் உபதேசித்தார். முதல் உண்மை துன்பத்தைப் பற்றியது. இது உலகம் பூராவும் பரவி, வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வருவது. பிறப்பு துன்பமானது; முதுமை துன்பமானது; நோய் துன்பமானது; மரணம் துன்பமானது: அன்பு செலுத்தாதவர்களோடு இணைந்திருப்பது துன்பமானது; அன்பு செலுத்துகின்றவர்களைப் பிரிந்திருப்பது துன்பமானது; விரும்புகின்றவைகளைப் பெற முடியாமல் போவது துன்பமானது; சுருங்கச் சொன்னல் பஞ்ச பூதச் சேர்க்கையால் அமைந்துள்ள வாழ்க்கையே துன்பமானது.

அடுத்து அறியப்பட வேண்டியது துன்பத்துக்கான காரணமாகும். ஆசையே துன்பங்கள் அனைத்துக்கும் காரணம் என்று புத்தர் உபதேசித்தார்.

மூன்ருவதாகத் துன்பத்தை ஒழிக்க ஆசைகளை அறவே கைவிட வேண்டுமென்று புத்தர் வலியுறுத்தினர்.

நான்காவதாக ஆசைகளிலிருந்து விடுபட எட்டு வழிகளை அவர் போதித்தார். நல்ல நோக்கு, நல்ல எண்ணம், நல்ல பேச்சு, நல்ல நடத்தை, நல்ல வாழ்க்கை, நல்ல முயற்சி, நல்ல கவனம், நல்ல கருத்து ஆகியவற்றையே அவர் அதற்கான வழிகளாக உபதேசித்தார். இந்த உபதேசங்கள் உடல், மனம், மொழி ஆகிய மனித நடவடிக்கைகளின் மூன்று வழிகள் சம்பந்தப்பட்டவையாக இருந்தன.

இந்த நான்கு உண்மைகளையும் கற்றுத் தெளி கிறவன் அர்காத் என்கிற முழுமையான சீடனு கிறுன் என்று குறிப்பிட்டார். உலக இன்பங்களுக் கும் துறவு நிலைகளுக்கும் மத்தியில் அமைந்த பாதையினையே ஆன்ம விடுதலைப் பாதையாகப் புத்தர் உபதேசித்ததோடு, மரணத்துக்குப் பின் அமையும் நிர்வாண நிலைக்கும் அதுவே அடிப்படை யாகும் என்று உபதேசித்தார்.

புத்தருடைய உபதேசங்களின் பெருமைகளும் சிறப்புக்களும் ஒருபுறமிருக்க ஹிந்து மதத்தின் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மறுத்து உரு வான நெறியே பௌத்த நெறியாகும். சடங்கு களும் சம்பிரதாயங்களுமே மனித வாழ்க்கையினை மோட்ச நிலைக்கு உயர்த்திவிடுமென அந்தக் கால பிராமண குருமார்கள் உபதேசித்தார்கள். தர்மம் என்கிற பெயரால் வாழ்க்கையை இயந்திர கதிக்கு தள்ளிக்கொண்டிருந்தது அன்றைய ஹிந்து மதம். சாதிப் பாகுபாடுகள் மனிதனைப் பிறப்பால் பிரித்து வைத்திருந்தன. பிறப்பிலிருந்து இறப்புவரை சாதி யின் கட்டுப்பாட்டினுல் மனிதன் செய்த தொழி லையே செய்துகொண்டிருந்தான். பிறப்பினுல் உயர்ந்தோர் பெருமை பெறவும், பிறப்பினுல் தாழ்ந்தோர் அறியாமையில் அழுந்திக்கிடக்கவும் அன்றைய இந்து மதம் வழிசெய்து வைத்திருந்தது. உயர்ந்த சாதியினருக்குத்தாழ்ந்த சாதியினர் சேவை செய்வதே ஒரு தர்மமாக ஹிந்து மதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஏற்றத்தாழ்வற்று மனித ேைடு மனிதனை இணைக்கும் மார்க்கமாக ஹிந்து

மதம் இருக்கவில்லை. கடவுளின் வழிகளில் குருட்டுத் தனமான நம்பிக்கை போதிக்கப்பட்டு ஹிந்து மதத்தின் பெரும்பகுதி மக்கள் அடிமைகள் போல் நடத்தப்பட்டனர். சுய சிந்தனைக்கு எந்த விதமான வழியும் இல்லாமல் இருந்தது.

3

புத்தர் இப்படிப்பட்ட சமுதாயத்தில்தான் தமது கொள்கைகளைப் போதித்தார். அவர்களுக்குப் புரியாத பாஷையில் அவர் பேசவில்லை. அன்பையும் அஹிம்சையினையும் பேச்சிலும் எண்ணத்திலும் செயலிலும் வெளிப்படுத்தினர். அவருடைய தெய்விகக் களை பொருந்திய தோற்றம் இளையோரையும் முதியோரையும், ஏழைகளையும் பணக்காரர்களையும், வசதி படைத்தோரையும் வசதியற்றோரையும் அவர்பால் ஈர்த்தது. தாம் உபதேசிக்கும் நான்கு வழிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பிறப்பை ஒழித்து நிர்வாணநிலையை அடைய முடியுமெனப் புத்தர் வலியுறுத்திச் சொன்னர்.

புத்தர் உபதேசங்கள் அந்தக் காலத்துப் பாமர மக்களையும் கவர்ந்தன. பஞ்சமனுகப் பிறந்ததனுல் வாழ்க்கையில் கதிமோட்சமே இல்லையெனக் கருதியவனும் புத்தரின் உபதேசத்தால் புதிய நம்பிக்கையைப்பெற்ருன். சாதிஏற்பாட்டினைப் புத்தர் ஏற்றுக் கொள்ளாததால் எல்லாச் சாதியினரும் அவருடைய உபதேசத்தைக் கேட்க வேறுபாடின்றிக் குழுமினர்

கள். அனைவரையும் சகோதரர்களாகப் பாவித்துச் சமத்துவமாக நடத்தினர். திருடுவதையும் பொய் சொல்லுவதையும் விபச்சாரம் புரிவதையும் மது அருந்துவதையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். அமானுஷ்யமான சக்திகளுக்கு மனிதர்கள் உரிமை கொண்டாடுவதை அவர் கேலி செய்தார்.

தமது கொள்கைகளைப் பரப்பி மக்களை வாழ்க்கையில் உயர்த்துவதற்காக பிட்சுக்களின் சங்கம் ஒன்றைப் புத்தர் நிறுவினர். பற்றற்ற நிலைக்குத் தங்களை ஆட்படுத்திக்கொள்ளும் மன வலிமை உடையவர்களே பிட்சுக்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். காவி உடை தரித்து, கைகளில் கமண்டலம் ஏந்தி புத்த நெறிகளைப் பரப்ப பிட்சுக்கள் நான்கு திசைகளிலும் புறப்பட்டார்கள்.

புத்த நெறியை ஏற்றுக்கொண்ட சாதாரண மனிதர்களும் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பல இளவரசர்களும் பிரபுக்களும் புத்த நெறியைத் தழுவினர்கள். புத்தரின் வளர்ப்பு அன்னையான கோதமியும் புத்த சங்கத்தில் இடம் பெற்ருர். ஆண்களைவிடப் பெண்கள் தாழ்வானவர்கள் என்பதைப் புத்தர் ஏற்றுக்கொள்ளாததால் புத்த சங்கத்தில் ஆண்களும் பெண்களும் சமமாகவே மதிக்கப்பட்டார்கள்.

கடைசிவரையில் பிச்சை எடுக்கும் பிட்சுவாக வாழ்ந்து புத்தர் தம்முடைய மற்ற சீடர்களுக்கு உதாரணமாக விளங்கினர். அவர் எங்கெங்கே பிரயாணம் செய்து தமது கொள்கைகளைப் போதித்

தார் என்று அறிந்துகொள்ளுவதற்குச் சரியான சரித்திர ஆதாரங்கள் இல்லை. அவர் வட இந்தியா வில் மட்டுமேதான் உபதேசம் செய்திருக்க வேண்டும். அநேகமாக அயோத்தி, பீஹார் போன்ற பிராந்தியங்களில் அவருடைய உபதேசங்கள் தீவிர மாக நடைபெற்றிருக்க வேண்டும். சுமார் 45 ஆண்டுகள் தமது அற வழியினை அவர் மக்க ளிடத்தில் உபதேசித்திருக்கிறார்.

மழைக்காலத்தில் எங்காவது கிராமத்திலோ நகரத்திலோ தங்கிவிடுவார். மன்னர்கள் அவரை மரியாதையுடன் வரவேற்றார்கள். செல்வந்தர்கள் அவருக்கும் சீடர்களுக்கும் தங்குமிடம் தந்து சிறப்புச் செய்தார்கள். குறிப்பாகத் தோட்டங் களில் அவருக்கு இடவசதி செய்து கொடுக்கப்பட் டது. ஏனெனில், தினந்தோறும் நூற்றுக்கணக்கான வர்கள் அவரைத் தரிசிக்க வந்தபடியே இருந்தார்கள். அதோடு அவர் தியானம் செய்வதற்குத் தோட்டங் களே சிறந்த இடங்களாக அமைந்தன.

செல்வந்தர்கள் அளித்த இடங்களில்தான் புத் தர் தங்கினார் என்பதில்லை. அன்புள்ளம் காட்டிய எந்த இடத்தையும் அவர் தமது இருப்பிடமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார். ஒரு நாள் கால்நடைகளின் நடைபாதை ஒன்றில் புத்தர் தியானத்தில் வீற்றிருந்தார். அவர்பால் அன்பு கொண்ட ஒருவன் அவரை நெருங்கி ''புத்த தேவா! தங்களால் இங்கே மகிழ்ச்சியாக அமர்ந்திருக்க முடிகிறதா?'' என்று கேட்டான்.

அதற்குப் புத்தர், ''உலகத்தில் மகிழ்ச்சியாக இருப்பவர்களில் நானும் ஒருவன்'' என்றார்.

அதற்கு அந்த இளைஞன், ''புத்த தேவா! இதுவோ குளிர்கால இரவு. கடும் பனிக்காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. தாங்கள் வீற்றிருக்கும் இடமோ ஆடுமாடுகளின் நடமாட்டத்தால் கரடுமுரடாகிப்போன இடம். தாங்கள் அணிந்திருக்கும் உடையோ மெல்லியது. வீசிடும் கூதல் காற்றோ கடுமையானது'' என்று சொன்னான்.

புத்தர் சிரித்துக்கொண்டே, ''உண்மைதான், அன்புள்ளம் கொண்ட இளைஞனே! நான் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன். உலகத்தில் மகிழ்ச்சியோடு வாழ்ந்துகொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன்'' என்றார்.

எந்தச் சூழ்நிலையிலும் புத்தர் தமது நிதானத்தை இழந்தது கிடையாது. பிராமண மத குருமார்களோடும் ஜைன முனிவர்களோடும் அவர் நிறைய விவாதங்களில் கலந்துகொண்டார். இனிமையாக அவர்களிடம் வாதிட்டு, கேள்விகள் கேட்பதன் மூலமாகவே, அவர்களை முரண்பட்டுப் பதில் சொல்ல வைத்தார். இந்த விஷயத்தில் சாக்ரடீஸைப்போலத் தர்க்கவாதத்தில் அவர்சிறந்த மேதாவிலாசம் பெற்றவராகஇருந்தார். யாருடைய வாதத் திறமையாலும் புத்தர் குழப்பமடைந்ததே கிடையாது. ஏனெனில், என்ன பேசுகிறோம் என்பதில் அவர் எப்போதும் தெளிவாகவே இருந்தார்.

பாமர ஜன்ங்களுக்குத் தமது தத்துவங்களைப் புரியவைக்கக் குட்டிக் கதைகளை அவர் நிறையச் சொன்னார்.

ஒரு நாள் பரத்துவாஜன் என்கிற உழவனைப் புத்தர் சந்தித்தார். அவன் அவரைப் பார்த்துச் சோம்பேறியாகச் சுற்ற வேண்டாம் என்றும், அவனைப் போல் உழைத்து உணவை உற்பத்தி செய்து சாப்பிடும்படியாகவும் அவருக்குச் சொன்னான். அதற்குப் புத்தர் புன்முறுவலுடன் தாமும் ஒரு உழவர்தான் என்றும், உழுது பண்படுத்துகிற வேலையில் தாமும் ஈடுபடுவதாகவும் எடுத்துச் சொன்னார். உழுவதற்கான கருவிகள் இல்லாமல் எப்படி உழ முடியுமென்று பரத்துவாஜன் அவரைப் பார்த்துக் கேட்டான். புத்தர் சொன்னார்;

''நம்பிக்கைதான் எனது விதை; சிந்தனைதான் எனக்கு வேண்டிய மழை. அறிவுதான் எனக்குத் தேவையான கலப்பையும் நுகத்தடியும். மனந்தான் நுகத்தடியில் கட்டப்படும் கயிறு. எனக்குள்ள கவனமே அதை இயக்கிடும் தூண்டுகோல். உழைப்பை அந்த நுகத்தடியில் பூட்டிய எருதுகளாக நான் பார்க்கிறேன். இந்த உழவின் மூலம் நிர்வாணம் என்கிற அறுவடையை என்னால் பெற முடிகிறது. இது தான் என்னுடைய உழவுத் தொழில்.''

ஒரு சமயம் தமது குழந்தையைப் பறிகொடுத்த தாய் ஒருத்தி, துயரம் மிகுதியால் புத்தரிடம் வந்து,

தனது குழந்தையினை உயிர்ப்பித்துத் தரவேண்டும் என வேண்டினாள். புத்தர் அவளைப் பார்த்து, அனுதாபத்துடன், இதுவரையில் யாருமே இறந்து போகாத வீட்டிலிருந்து ஒரு பிடி கடுகு வாங்கி வந்தால் அந்தத் தாயினுடைய குழந்தையினை உயிர்ப்பித்துத் தருவதாகக் கூறினார். அந்தத் தாய் மிகுந்த நம்பிக்கையோடு ஒவ்வொரு வீடாக ஏறிப் போய், அந்த வீட்டில் இதுவரையில் யாராவது இறந்து போயிருக்கிறார்களா என்று கேட்டாள். எத்தனையோ வீடுகளுக்குச் சென்றும், இறக்காதவர்கள் வீடு எதுவுமே இல்லையென்பதைக் கண்டு சோர்வுற்ற அந்தத் தாய், புத்தரிடம் திரும்பி வந்து விவரத்தைச் சொன்னாள். புத்தர் அமைதியாக, மரணம் தவிர்க்க முடியாதது என்பதனையும், அது இயற்கையாக எல்லா இடங்களிலும் நிகழக்கூடும் என்பதனையும் அந்தத் தாய்க்கு உணர்த்தி, அவளை ஆறுதல் பெறச் செய்தார்.

பெரிய விஷயங்களையும் எளிமையாக்கி உணர்த்துவதில் புத்தர் மிகுந்த ஞானமுடையவராக விளங்கினார்.

எண்பது வயதாக இருந்த போது அவர் நோய் வாய்ப்பட்டார். முடிவு நெருங்கி வருவதை அவர் உணர்ந்தார். தமது சீடர்களிடம் உரையாடாமல், உடல் என்னும் கூட்டிலிருந்து தமது ஆன்மா விடுதலை பெறுவதை அவர் விரும்பவில்லை. சீடர்களின் வருகைக்காக மழைக்காலம் பூராவும் காத்திருந்தார், அவர்களும் வந்தார்கள். மூன்று மாதங்களில் தமது

வாழ்க்கை முடிந்துவிடும் என்பதனை அவர்களுக்கு அறிவித்தார். வேறு வழிகாட்டிக்காக காத்திருக் காமல் உபதேசங்களைத் தொடருமாறு அவர்களுக் குக் கட்டளையிட்டார். கொள்கைகளில் உறுதியாக இருந்து, புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளு வதில் எப்போதும் ஆவலுடன் இருக்கும்படி உபதேசித்தார்.

நோயுற்ற உடலோடு பயணத்தை மேற் கொண்டு தமது உபதேசங்களைத் தொடர்ந்தார். குசி நகரத்தை அடைந்தவுடன் தமது சீடர்களை அழைத்துச் சில உபதேச மொழிகளைக் கூறிய வுடன் ஞானம் பெற்ற புத்தர், நிர்வாண நிலையை எய்தினர்.

புத்தரின் சிந்தனைகள் ஆன்மிக வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தின. எல்லா அறநெறி யாளர்களுக்கும் ஏற்பட்டதைப் போலவே, புத்தரின் கோட்பாடுகளை மக்கள் மறந்து, அவரையே தெய்வ மாக வழிபடத் தொடங்கி, புதிய சம்பிரதாயங் களுக்கும் ஆட்பட்டார்கள்.

புத்தர் பிறந்த மண்ணிலே அந்த மதம் வேரூன்றவில்லை. ஆனல், ஆசியாவின் பல நாடுகளி லும் அது இன்றைக்குப் பெரிய மதமாக நிலைபெற் றிருக்கிறது. உலகத்தின் மதங்களுள் பௌத்த மதம் சிறப்பான இடத்தை வகிக்கிறது. புத்தரின் ஞான வழி மனித சிந்தனையில் ஏற்படுத்தியுள்ள மகத்தான மாற்றத்தை யாரும் குறைத்து மதிப் பிட்டுவிட முடியாது.

கன்ஃபியூஷியஸ்

(கி. மு 550—கி. மு. 479)

1917-ம் ஆண்டு, பிப்ரவரி மாதத்தில், சீனப் பாராளுமன்றத்தில் சுவையான விவாதம் ஒன்று நடந்தது. ஐந்தாண்டுகளுக்கு முன்னர்தான், மோட்ச சாம்ராஜ்யத்தின் திருக்குமாரன் என்று அழைக்கப்பட்ட சீனச் சக்கரவர்த்தி முடி துறந்திருந்தார். சீனு அதற்குப் பிறகு குடியரசு ஆகி இருந்தது. இரண்டாயிரம் வருடங்களாகத் தேசத்தின் மதமாக மதிக்கப்பட்டு வந்த கன்ஃபியூஷியானிஸம் அந்த நிலையிலிருந்து ரத்து செய்யப்பட்டிருந்தது. இப்போது புதிதாகக் கூடிய பாராளுமன்றத்தில் அந்த மதத்தை மறுபடியும் தேசிய மதமாக்கி, கன்ஃபியூஷியஸை சீனுவின் கடவுளாக ஆக்க வேண்டும் என்று யோசனை சொல்லப்பட்டது.

வாதப் பிரதி வாதங்கள் ஆர்வத்தோடு நடைபெற்றனவே தவிர அந்த யோசனை நிறைவேற்றப் படவில்லை. ஆனால், அந்தச் சம்பவம் சீன மக்களின் மீது கன்ஃபியூஷியஸின் சிந்தனைகளுக்கிருந்த ஆதிக்கத்தினைத் தெளிவுபடுத்தியது. பல தலைமுறைகளாக கன்ஃபியூஷியஸ் சீன மக்களால் போற்றித் துதிக்கப்பட்டாலும் அவரைக் கடவுள் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்று அதுவரையில் யாரும் சொன்னது கிடையாது. முடியாட்சியானுலும் குடியாட்சியானுலும் கன்ஃபியூஷியஸ் சீன

மக்களால் தொடர்ந்து மதிக்கப்பட்டு வந்தார் என்பதனையே 1917-ம் ஆண்டு சீனப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் எடுத்துக் காட்டியது.

அவரைக் கடவுள் என்று சொல்லுவதையோ, கடவுளின் அவதாரம் என்று கற்பனை செய்வதையோ அவரே ஏற்றுக்கொள்ளாமல் நகைப்புக்குரிய விஷயமாகத்தான் கருதி இருப்பார். ஏனெனில், அவர் தம்மை ஒரு மதஸ்தாபகராகக் கூட என்றைக்குமே கருதிக்கொண்டது கிடையாது. சடங்குகளை அறவே வெறுத்து உபதேசம் செய்தவர் அவர். இந்தக் காலத்தில் அவர் வாழ்ந்திருந்தால் அவரை ஒரு சம்சயவாதி என்றுதான் கூறி இருப்பார்கள். அதீதமான சக்திகளில் அவர் அதிக நம்பிக்கை வைத்திருந்தது கிடையாது.

பிறப்பிற்கு முன்னால் மனிதன் எப்படி இருந்தான் என்பதுபற்றியோ, இறந்த பிறகு அவன் என்ன ஆகிறான் என்பதுபற்றியோ அவர் கவலைப்பட்டது கிடையாது. வாழ்கின்ற வரையில் மனிதன் ஒழுக்கம் உள்ளவனாக, நாணயமானவனாக, நல்ல நடத்தை உடையவனாக வாழ வேண்டுமென்றே அவர் உபதேசித்தார். இந்த உலக வாழ்க்கையைப்பற்றித்தான் அக்கறை செலுத்தினாரே தவிர, வேறு விஷயங்களில் அவர் நாட்டம் கொண்டது கிடையாது.

கன்ஃபியூஷியஸ் வாழ்ந்த காலம் சீன வரலாற்றில் சிக்கல்கள நிறைந்த காலம். ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் சீனாவை ஆண்டுவந்த புரோகிதச் சக்கரவர்த்திகளான ஷாங் வம்சத்திலே வந்தவர்

கன்ஃபியூஷியஸ் என்று கருதப்படுகிறது. ஷாங்வமிச ஆட்சி முடிவுக்கு வந்து 500 ஆண்டுகள் வரை சீன சாம்ராஜ்யம் சிறு சிறு ராஜ்யங்களாகச் சிதறுண்டு போயிற்று, இந்தக் கால கட்டத்தைச் சீன வரலாற்றில் 'குழப்பகாலம்' என்று அழைக்கிருர்கள். ஏறத்தாழ 5000 வரை சிறு சிறு ராஜ்யங்கள் இருந்தனவாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் குழப்ப காலத்தில் தான், லூ என்னும் ராஜ்யத்தில் கன்ஃபியூஷியஸ் பிறந்தார். அவருடைய தகப்பஞர் சோ என்னும் மாவட்டத்துக்கு அதிகாரியாக இருந்தார். அவருக்குப் பல மகள்கள் இருந்தார்களே தவிர ஆண் வாரிசு இல்லே. அவர் தம் 70-வது வயதில் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். அந்தத் திருமணத்தின் விளேவாக அவருக்கு ஒரு ஆண்வாரிசு ஏற்பட்டது. அந்த ஆண் குழந்தைதான் கன்ஃபியூஷியஸ்.

எல்லாப் பெரிய மனிதர்களின் பிறப்புப் பற்றியும், அதன் மகத்துவம் பற்றியும் கட்டுக் கதைகள் முளேப்பதைப் போலவே, கன்ஃபியூஷியஸுும் தெய்வாம்சம் கொண்ட பிறவி என்பதற்கு ஏராளமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. இந்தக் கதைகளெல்லாம், பூஜா மனேபாவம் கொண்டவர்கள் அவரைப் பெருமைப் படுத்துவதற்கென்றே உற்பத்தி செய்த கற்பனேக் கதைகள் என்றுதான் கொள்ள வேண்டும்.

கன்ஃபியூஷியஸுுக்கு மூன்று வயதாக இருக்கும் போதே அவருடைய தந்தை இறந்து போனர். குடும்பம் ஏழ்மையில் கிடந்து உழன்றது. சிறு

வயதிலேயே குடும்பத்தைக் காப்பாற்றும் பாரம் கன்ஃபியூஷியஸின் தலையில் விழுந்தது. ஆனால், 15-வயதிலேயே ஒரு மகான் போல வாழவேண்டும் என்கிற முடிவுக்கு அவர் வந்துவிட்டார்.

19-வயதில் அவருக்குத் திருமணமும் ஆயிற்று. இரண்டு பெண்களுக்கும் ஒரு பையனுக்கும் அவர் தந்தை ஆனார். குடும்பக் கவலையைவிடச் சமுதாய நலனிலேயே அவருடைய நாட்டம் அதிகமாக இருந்தது. திருமணம் ஆனவுடனே அரசாங்கப் பண்டகத்தின் மேலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதன் பிறகு, தோட்டங்களையும் கால்நடைகளையும் பராமரிக்கும் அரசாங்க அதிகாரி ஆனார்.

21-வது வயதில் கல்விக் கழகம் ஒன்றை நிறுவினார். அரசாங்கத்தை எப்படிச் செம்மையாக நடத்துவது என்பதுபற்றி மாணாக்கர்களுக்கு அங்கே பாடம் சொல்லிக் கொடுத்தார். வாழ்க்கையின் பல அந்தஸ்துகளில் இருந்த மாணவர்கள் அவரிடத்திலே பயின்றார்கள். சுயமாகச் சிந்தித்து சுலபமாகக் கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களையே அவர் தமது மாணாக்கர்களாகச் சேர்த்துக் கொண்டார்.

அவருடைய புகழ் பரவிற்று. அவருடைய நிருவாகத் திறமையினை அனைவரும் பாராட்டத் தொடங்கினார்கள். பெரிய அந்தஸ்திலுள்ள இரண்டு இளைஞர்கள் அவருடைய மாணாக்கர்கள் ஆனார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு சாம் ராஜ்யத்தின் தலைநகருக்குச் சென்றார். அங்கே உள்ள நூல் நிலையத்தில் நிறையப் படித்ததோடு

சங்கீதமும் கற்றுக்கொண்டார். சங்கீத ஞானம், எதையும் நிதானத்தோடு பரிசீலிக்கும் சக்தியைக் கொடுக்கும் என்பது அவரது கருத்து. அரசாங்க அலுவல்களில் சங்கீதத்துக்கு முக்கியமான இடம் இருக்க வேண்டும் என்கிற கருத்துக் கொண்டிருந்தார் அவர்.

இந்தச் சமயத்தில்தான் சீனுவின் பெரிய தத்துவ மேதையான லியோ-ஷியைச் சந்தித்தார். சீனுவின் முக்கிய மதங்களில் ஒன்ருன டாவோயிஸ்டு மதத்தைக் கண்டவரே இவர்தான். கொள்கைகளில் இரண்டு பேரும் முறன்பட்டிருந்தாலும் லியோ-ஷியால் கன்ஃபியூஷியஸ் மிகவும் கவரப்பட்டார்.

கன்ஃபியூஷியஸின் புகழ் லூ ராஜ்யத்தில் பரவத் தொடங்கிய போது அங்கே பெரும் கலவரம் மூண்டது. கன்ஃபியூஷியஸ் அங்கிருந்து வெளியேறினுர். அவர் தம் சீடர்களுடன் மலையைத் தாண்டி அடுத்த ராஜ்யத்துக்குள் பிரவேசித்தபோது கல்லறையின் அருகே பெண்ணெருத்தி அழுது கொண்டிருந்தாள். அவருடைய சீடர்களில் ஒருவன் அவளை நெருங்கி, ஏன் அழுகிருய் என்று கேட்ட போது, அவள் தனது மாமனுரையும் தனது கணவரையும் தனது புதல்வரையும் ஒரு புலி அந்த இடத்தில் அடுத்தடுத்துக் கொன்றுவிட்டதாகவும், அந்தத் துயரம் தாங்க மாட்டாமல் அவள் அங்கே அழுது கொண்டிருப்பதாகவும் கூறினுள். அப்படியானுல் அந்த இடத்திலிருந்து அவள் ஏன் போகவில்லை என்று அவளைக் கேட்ட பொழுது, இங்கே

யுள்ள சர்க்கார் கொடுங்கோன்மையான சர்க்காராக இல்லாததால் இங்கேயே தங்கியிருக்கிறேன் என்று பதில் சொன்னுள். உடனே கன்ஃபியூஷியஸ் தமது சீடர்களைப் பார்த்து, கொடுங்கோலாட்சி நடக்கும் நாட்டைவிடக் கடும்புலி வாழும் காடு நன்று என்று மக்கள் கருதுவதாக உணர்த்தினுர்.

2

பல ஆண்டுகள் பொது வாழ்க்கைப் பொறுப்பு ஏதுமில்லாமல் இருந்தார் கன்ஃபியூஷியஸ். அவர் சென்றடைந்த புதிய ராஜ்யத்தின் அதிபர் அவருக்கு உதவித்தொகை அளிக்க முன்வந்தார். வேலையில்லாமல் பண உதவி பெறுவது தமது கோட்பாடுகளுக்கு முரண்பட்டது எனக் கூறி, அந்த உதவிப் பணத்தை கன்ஃபியூஷியஸ் மறுத்துவிட்டார். ஆனுல், மக்களிடத்திலே உலவி தமது கோட்பாடுகளை அயராமல் போதித்தார். அவரிடம் பக்தி விசுவாசம் கொண்ட சீடர்கள் அவரது நடவடிக்கைகளையும் உபதேசங்களையும் அப்படியே பதிவு செய்து வைத்தார்கள்.

கன்ஃபியூஷியஸ் வாழ்க்கையை மிகவும் நேசித்தார். உணவைச் சுவையுணர்ந்து புசிப்பார். சாப்பிடும்போது யாருடனும் பேசமாட்டார். உணவின் இறுதியில் ஒரு துண்டு இஞ்சி சாப்பிடும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார்.

நடைமுறை அரசியலில் அவர் மிகவும் கெட்டிக்காரராக விளங்கினுர். அவருடைய 52 வது வயதில்

சொந்த ராஜ்யத்துக்கு அவர் திரும்பவும் அழைத்துக்கொள்ளப்பட்டார். அந்த ராஜ்யத்தின் ஒரு பகுதிக்கு கவர்னராகவும் நியமிக்கப்பட்டார். படிப் படியாக பதவியில் உயர்ந்து அந்த ராஜ்யத்தின் மிகப்பெரிய பதவிகளை அலங்கரித்தார். அவருடைய நிருவாகத்தில் ஒழுங்கீனம் தலையெடுக்காமல் மறைந்தது. ஆண்கள் ஒழுக்கம் உள்ளவர்களாகவும், பெண்கள் கற்பு நிலை மிக்கவர்களாகவும் இருந்தார்கள். மக்களின் வழிபாட்டுக்குரிய மனிதராக அவர் போற்றப்பட்டார். நாடோடிப் பாடல்களில் எல்லாம் அவர் புகழ் பாடப்பட்டது.

கன்ஃபியூஷியஸின் சீர்திருத்தங்கள் நவீனகாலச் சிந்தனுவாதிகளையும் பிரமிக்க வைக்கக்கூடியவை. ஏழைகளுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தார். இளையோருக்கும் முதியோருக்கும் அவரவர்களுக்கு ஏற்ற உணவைக் கொடுக்கச் செய்தார். தொழில் துறையில் பலசாலிகளுக்கும் பலஹீனர்களுக்கும் ஏற்ற வேலைகளைக் கொடுத்தார். பொருள்களின் விலையை நிர்ணயம் செய்தார். அரசாங்க வருவாய் களிலிருந்து வியாபாரத்திற்கு ஊக்கம் அளித்தார். போக்குவரத்துச் சாதனங்களைச் செம்மைப்படுத்தினுர். பயனற்றுப் போயிருந்த பாலங்களைப் பழுது பார்த்துச் சீர்திருத்தி அமைத்தார். பிரபுக்களின் அதிகாரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். நீதியின் பார்வையில் அனைவரும் சமம் என்பதை நிலை நிறுத்தினுர்.

அவரது சீர்திருத்தங்கள் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. அவருடைய ராஜ்யமான லூ சிறப்பாக நிர்வகிக்கப்படுவதைப் பார்த்த அண்டை ராஜ்ய அதிபதி பீதி அடைந்தார். அதே உரிமை களைத் தமது ராஜ்ய மக்களும் கேட்டுக் கிளர்ச்சி செய்தால் என்ன செய்வது என்று பயந்தார். ஆகவே, லூ ராஜ்யத்தைச் சீர் குலைக்க அவர் ஒரு திட்டம் தீட்டினார்.

இசையிலும் நாட்டியத்திலும் தேர்ச்சி பெற்ற 80 அழகிகளை லூ ராஜ்யத் தலைவருக்கு அண்டை நாட்டு அதிபதி வெகுமதியாக அனுப்பிவைத்தார். லூ ராஜ்யத் தலைவர் அழகிகளின் மயக்கத்தில் ஆட்சியை மறந்தார். கன்ஃபியூஷியஸின் ஆலோசனைகளும் அவருடைய செவிகளில் ஏற மறுத்தன. நாடு சீர் குலைவதைப் பார்த்துக்கொண்டு கன்ஃபியூஷியஸால் சும்மா இருக்க முடியவில்லை. தமது ராஜ்யத்திலிருந்து வெளியேற முடிவு செய்து புறப்பட்டார். தமது ராஜ்யத் தலைவர் தம்மை மீண்டும் அழைத்துக்கொள்ளுவார் என்கிற சபலம் அவருக்கு இருந்தது. அதற்கான தூதரின் வருகையினை எதிர்பார்த்தே அவர் வெளியேறிச் சென்றுகொண்டிருந்தார். எந்தத் தூதரும் அவரைத் தேடி வரவில்லை. தாங்க முடியாத ஏமாற்றத்தோடு தாம் உருவாக்கிய ராஜ்யத்திலிருந்து வெளியேறினார் கன்ஃபியூஷியஸ்.

3

மூன்று ஆண்டுகள் பதவியிலிருந்து மகத்தான சாதனை புரிந்த அவர், பதின்மூன்று ஆண்டுகள் வேலையில்லாமல் வெளிநாடுகளில் இருந்தார். தமது சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டுவர ஆதரவு காட்டும் இளவரசனைத் தேடி நாடுகளெல்லாம் சுற்றினார். போன இடங்களிலெல்லாம் அவருக்கு வரவேற்பு இருந்தது. அவரிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க யாரும் முன் வரவில்லை. ஒரு ராஜ்யத்தின் அதிபதி ஒருவர், ஒரு நகரத்தை கன்ஃபியூஷியஸுக்கு மானியமாகக் கொடுக்க முன் வந்தார். அதை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்து விட்டார். ''எனது கொள்கைகளை ஏற்று நடக்கும் ஆட்சியாளர்கள்தான் எனக்குத் தேவையே தவிர அவர்கள் அளிக்கும் பரிசுப் பொருள்கள் எனக்குத் தேவையில்லை'' என்று அடித்துச் சொல்லிவிட்டார்.

வறுமையில் வாடிய போதும் வெகுமதிப் பொருள்களை ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இருக்க வில்லை. தன்மானம் உள்ள மனிதன் கொள்கைக்காக மட்டுமே வாழும் உயர்ந்த மனிதனாகத் தான் இருப்பான் என்று தமது சீடர்களுக்கு எடுத்துரைத்தார்.

கடைசியாக அவர் விரும்பிய அழைப்பு அவருக்குக் கிடைத்தது. தமது பழைய ராஜ்யத்துக்கே அவர் மீண்டும் அழைக்கப்பட்டார். லூ ராஜ்யத்தின் பழைய அதிபதி மாண்டுபோய் அவருடைய புதல்வர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

கன்ஃபியூஷியஸின் திறமைதான் லூ ராஜ்யத்தின் சிறப்புக்குக் காரணம் என்பதனை உணர்ந்த அவர், கன்ஃபியூஷியஸைத் திருப்பி அழைத்து வர ஏற்பாடு செய்தார்.

கன்ஃபியூஷியஸுக்கு இப்போது வயது 70 ஆகி இருந்தது. அலைச்சலால் வயதிற்கு மீறிய முதுமைக் கோலத்துடன் இருந்தார். எனவே, அரசியல் பொறுப்புகளை ஏற்கமுடியாமல் பள்ளத் தாக்கு வாசஸ்தலம் ஒன்றில் குடியேறித் தமது எஞ்சிய வாழ்க்கையினை அமைதியாகக் கழித்தார்.

4

தமது சீடர்களுக்கு உபதேசம் செய்வதிலேயே அவருடைய பொழுது கழிந்தது. ''வசந்த காலமும் இலையுதிர் காலமும்'' என்கிற அரிய புத்தகம் ஒன்றினை எழுதினர். 242 ஆண்டுகால வரலாறு அதில் இடம் பெற்றது. அந்தப் புத்தகம் மட்டுமே கன்ஃபியூஷியஸின் பெருமைக்குச் சான்று அல்ல. அவர் இறந்து 200 ஆண்டுகளுக்குப் பிறகு சீர் திருத்த நோக்கம் படைத்த ஒரு சக்கரவர்த்தி கன்ஃபியூஷியஸின் சிந்தனைகளே சீனுவில் இருக்கக் கூடாது என்கிற எண்ணத்தில், அவருடைய புத்தகங்கள் அனைத்தையும் எரித்துவிட ஏற்பாடு செய்தார். கன்ஃபியூஷியஸின் சிந்தனைகளைப் போதிக்கும் அத்தனை பேராசிரியர்களுக்கும் மரணதண்டனை விதித்தார். இத்தனை முயற்சிகளுக்குப் பிறகும் கன்ஃபியூஷியஸின் சாதனைகளும் போதனைகளும்

சீன வரலாற்றில் புதிய சக்தியோடு வாழத் தொடங்கின.

கன்ஃபியூஷியஸ் மத ஸ்தாபகரல்ல. மனிதர்கள் ஒழுக்கத்தோடு வாழ வேண்டுமெனப் போதித்த நெறியாளர். கி. மு. 478-ல் அவருடைய 73-வது வயதில் அவர் மரணமடைந்தார். கடைசிக் காலத்தில் ஏக்கத்தோடு அவர் குறிப்பிட்டதாவது:

''என்னை அறிந்தவர்கள் யாரும் இல்லை. என்னை எஜமானாக ஏற்றுக்கொண்டு நிர்வாகம் செய்யும் புத்திசாலி ஆட்சியாளர் எவரும் இல்லை.''

ஆனால், அவருடைய சீடர்கள் மூன்றாண்டுகள் வரை அவருடைய கல்லறையைச் சுற்றிக் கண்ணீர் வடித்தபடியே வீற்றிருந்தார்கள். மன்னர்களின் மரியாதையினைத் தகுந்த முறையில் அவர் பெறாமல் போயிருக்கலாம். மக்கள் இதயத்தில் நிரந்தரமான இடம் அவருக்கு என்றைக்குமே உண்டு.

சாக்ரடீஸ்

(கி. மு. 469—கி. மு 399)

சாக்ரடீஸ் எந்த நூலும் எழுதவில்லை. ஆனால், எந்த நூலாசிரியரும் பின்பற்ற வேண்டிய மாபெரும் சிந்தனையாளராக அவர் விளங்கினார். உலகம் கண்ட மிகப்பெரிய தத்துவப் பேராசிரியர்களுள் அவரும் ஒருவர். மனித சமுதாயத்தின் சிந்தனையாளர்கள் வரிசையில் அவருக்குச் சிறப்பான இடம் உண்டு.

அவரது அறிவாற்றலால் ஏதென்ஸ் நகரத்தில் கவனத்துக்குரிய மனிதர் ஆனார். அவருடைய ஒழுக்க நெறிகளே அவருடைய உயிருக்கு உலை வைத்தன.

அவருடைய சிறப்பியல்புகளை அவருடைய மாணாக்கரான பிளேட்டோ எழுதியவற்றிலிருந்தும் சரித்திரப் பேராசிரியர் செனஃபோன் எழுதிய சரித்திரத்திலிருந்தும் தெரிந்துகொள்ள முடிகிறது. கேள்விகள் கேட்ட அவர் வாழ்ந்த சமுதாயத்தின் சிந்தனை முரண்பாடுகளை அம்பலப்படுத்தினார். அவருடைய உரையாடல்கள் அனைத்தும் பிளேட்டோவினால் அப்படியே பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளன.

சாக்ரடீஸ் கி. மு. 469-ல் பிறந்தார். ஏதென்ஸ் நகரத்தின் பொற்காலத்தில் அவர் வாழ்ந்தார். கிரேக்க ராஜ்யங்களுள் மிகவும் வல்லமை படைத்த ராஜ்யமாக ஏதென்ஸ் அப்போது விளங்கியது.

சாக்ரடீஸின் தந்தை ஒரு சிற்பி. சிறிது காலம் தந்தையின் தொழிலேயே மகனும் பார்த்தார். சாக்ரடீஸின் தாயார் பிரசவம் பார்க்கும் மருத்து வச்சியாகப் பணியாற்றினார். பிற்காலத்தில், சிந்தனை பிறப்பதற்கு மருத்துவம் பார்ப்பதால் தாயின் தொழிலேயே தாமும் மேற்கொண்டிருப்ப தாக சாக்ரடீஸ் வேடிக்கையாகக் குறிப்பிடுவது உண்டு.

ஏதென்ஸ் நகரத்தின் எல்லாக் குடிமக்களேயும் போலவே சாக்ரடீஸும் சிறிது காலம் ராணுவத்தில் இருந்தார். ராணுவ வாழ்க்கை முடிந்தவுடன் வாழ்க்கையின் பெரும்பகுதியை பேசுவதிலேயே கழித்தார். அதிகாலேயில் எழுந்து வெளியே கிளம்பிவிடுவார். சப்பையான மூக்கும், பெரிய விழிகளும் கொண்டு, அழுக்கு உடையணிந்து திரியும் அந்தக் குள்ளமான உருவத்தை எல்லோரும் நன்ருக அடையாளம் கண்டு வைத்திருந்தார்கள். கோடை காலமாகட்டும் குளிர்கால மாகட்டும் அவர் மேலே கோட்டு அணிந்துகொண்டதே கிடையாது. காலுக்குச் செருப்பு அணியும் பழக்கமும் அவரிடம் இல்லே. அறிவைப்பற்றியே அவர் எப்போதும் கவலேப்பட்டாரே தவிர உடலேப் பற்றி யும் தோற்றம் குறித்தும் அவர் சிறிதும் அக்கறை காட்டியது கிடையாது.

ஏதென்ஸ் நகர எல்லேக்குள்ளேயே வளேய வந் தார். தெருக்களிலெல்லாம் சுற்றி அலேந்தார். எதிர்ப்பட்டவர்களே எல்லாம் ஏராளமான கேள்வி

கள் கேட்டார். சந்தைச் சதுக்கத்தில் நின்று கொண்டு அவர் நடத்திய உரையாடல்கள் அனை வரையும் கவர்ந்தன. எல்லோருமே அவர் பால் கவரப்பட்டார்கள். கேள்விகள் கேட்டே மற்றவர் களின் முரண்பாடுகளை வெளிப்படுத்தினர்.

ஒன்றும் தெரியாதவர் போலப் பேச்சைத் தொடங்குவது அவருடைய பழக்கம். எளியகேள்வி கள் மூலமாக வாழ்க்கையின் நன்மைகளை மற்றவர் களுக்கு உணர்த்துவதற்கு முயன்றார். நன்மை இல்லாமல் மனிதன் இல்லை என்பதே அவருடைய கருத்து. மெய்யான அறிவு நன்மை நோக்கியே மக்களை அழைத்துச் செல்லும் என்பது அவருடைய அசையாத நம்பிக்கை. நல்லொழுக்கம் என்பது நன்மையைப்பற்றிய அறிவு என்றும், பாவங்கள் எல்லாம் நன்மையைப் பற்றிய அறியாமையே என்றும் அவர் விளக்கினர்.

2

இவ்வளவு பெரிய சிந்தனையாளராக இருந்தும் ஏதென்ஸ் நகரத்தின் பொது வாழ்க்கையில் அவர் பங்கு பெறவில்லை. பொது ஜன அபிப்பிராயத்தைப் பற்றிக் கவலைப்படாத தனி வழிச் சிந்தனையுடைய மனிதராகவே அவர் வாழ்ந்தார். ஒரு சமயம் ஏதென்ஸ் நகர கௌன்சிலில் உறுப்பினராக அவர் பதவி வகித்தார். அப்போது ஏதென்ஸ் நகரத் தள பதிகள் சில பேர் அந்தக் கௌன்சிலின் முன்னர்

விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார்கள். பொது ஜன அபிப்பிராயம் அவர்களுக்குப் பாதகமாக இருந்ததால் சட்ட விரோதமான வகையில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. கௌன்சிலில் இருந்த எல்லோரும் மரண தண்டனையை ஆதரித்தார்கள். சாக்ரடீஸ் மட்டும் அதை எதிர்த்தார். பொது ஜனங்கள் எவ்வளவோ ரகளை செய்தும் சாக்ரடீஸ் தமது நிலையினை மாற்றிக் கொள்ளவில்லை. நீதியினையும் நடைமுறைச் சட்டத்தையும் மதித்துப் போற்றுவது தம்முடைய கடமை என்று அவர் கருதினர். அதே போல கி. மு. 404-ல் ஏதென்ஸ் சாம்ராஜ்யம் முடிவுக்கு வந்த போது, ஏதென்ஸ் நகரை ஆண்ட 30 பேர் சட்ட விரோதமான உத்தரவு ஒன்றினைப் பிறப்பித்துச் சிலரைக் கைது செய்யும்படி சாக்ரடீஸைத் தூண்டினர்கள். அந்த உத்தரவை நிறைவேற்றிட சாக்ரடீஸ் மறுத்தார். அப்படி மறுப்பது தம்முடைய உயிருக்கே ஆபத்தாக முடியுமென்று அவருக்குத் தெரியும். இருந்தாலும், அநீதி என்று தமக்குப் பட்டதைச் செய்ய அவருடைய மனம் ஒப்பவில்லை. மக்கள் கிளர்ந்து எழுந்து அந்த 30 பேரை வீழ்த்தியதால் சாக்ரடீஸ் உயிர் தப்பினர்.

மரணத்தைக் கண்டு என்றைக்குமே அவர் பயந்தது கிடையாது. மனித உடல் அழிந்தாலும் ஆன்மா வாழ்வதாக அவர் நம்பினர். புராணக் கடவுள்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நல்லொழுக்கம், நல்ல நடத்தை ஆகியவற்றையே அவர் திரும்பத் திரும்ப வற்புறுத்தினர்.

நேரம் போவதே தெரியாமல் சிந்தனையில் மூழ்கி இருப்பார். ஒரு சமயம் ஏதோ சிந்தனையில் மூழ்கி ஒரே இடத்தில் அப்படியே 24 மணி நேரம் நின்றுகொண்டிருந்தாராம். அவருடைய வெளிப்படையான பேச்சு நிறைய விரோதிகளை அவருக்கு சம்பாதித்துக் கொடுத்தது. இன்பச்சுவை நாடகங்கள் எழுதுவதில் சிறந்த மேதையாக விளங்கிய அரிஸ்டோஃபேனஸ் ''மேகங்கள்'' என்கிற தமது நாடகத்தில் சாக்ரடீஸைக் கேலி செய்தார். அந்த நாடகத்தில் சாக்ரடீஸை அரைப் பைத்தியம்பிடித்த கிழவனாகச் சித்தரித்திருந்தார். அந்தக் கிழவன் எண்ணங்களை விற்பனை செய்யும் கடை ஒன்று வைத்துத் தவறான எண்ணங்களை விற்று இளைஞர்களைக் கெடுப்பதைப்போல உருவகப்படுத்தியிருந்தார். அந்தக் காலத்தில் ஏதென்ஸ் நகரப் பிரமுகர்கள் சிலரிடையே சாக்ரடீஸ்பற்றி இருந்த எண்ணத்தினையே நாடக ஆசிரியர் தமது நாடகத்தில் பிரதிபலித்திருந்தார். இருந்தாலும் சாக்ரடீஸின் சிந்தனைகளால் கவரப்பட்ட ஒரு கூட்டம் எப்பொழுதும் அவரைச் சுற்றி இருந்தது. அவருடைய வாதத் திறமை பெரும்பாலோரால் பாராட்டப்பட்டது. கிரீட்டோ, பிளேட்டோ, செனஃபோன், பெரிக்கிளிஸ், யூரிப்பிடிஸ் போன்ற மேதைகள் அவருடைய காலடியில் அமர்ந்து, அவருடைய சிந்தனைகளால் பயனடைந்தார்கள். சாக்ரடீஸ் எந்தத் தத்துவத்தையும் உருவாக்கவில்லை. கேள்விகளின் மூலமாகவோ பகுத்தறிவதன் மூலமாகவோ உண்மையின் ஒளியைத் தரிசிக்க முடியும் என்று நம்பி அதற்காகப் பாடுபட்டார்.

இப்படிப்பட்ட ஒரு மனிதர் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்த கதை வேடிக்கையானது. அவர் இரண்டு முறை திருமணம் செய்துகொண்டார். முதலில் மெர்ட்டன் என்ற பெண்ணை மணந்து அவள் மூலமாக இரண்டு ஆண் மக்களுக்குத் தந்தை யானார். இரண்டாம் முறையாக சாந்திபீ என்கிற பெண்ணை மணந்துகொண்டார். அவள் மூலமாக அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவள் கணவனை ஆட்டிப் படைக்கும் அடங்காபிடாரியாக இருந்தாள் என்று சொல்லப்படுகிறது. அதுபற்றி நிறையக் கதைகள் உலவுகின்றன. அவை எந்த அளவிற்கு உண்மை என்பது நமக்கு தெரியவில்லை. சாக்ரடீஸ் போன்ற தத்துவ ஞானியை மணந்து கொண்ட பெண்ணின் வாழ்க்கை அவ்வளவு நிம் மதியாக இருந்திருக்க முடியாது என்று நம்மால் ஓரளவுக்கு யூகித்துக்கொள்ள முடிகிறது.

ஒரு நாள் சாக்ரடீஸ், வீட்டு வாயிற்படியில் நின்று, நண்பர் ஒருவருடன் நெடுநேரம் விவாதித் துக்கொண்டிருந்தாராம். மனைவி எவ்வளவோ முறை அழைத்தும் அவர் வீட்டுக்குள் வராமல் பேச்சிலே மும்முரமாக ஈடுபட்டிருந்தார். அவர் காதில் விழும்படியாக மனைவி கடுமையாகப் பேசி யும் அவர் உள்ளே வரவில்லை. ஆத்திரமடைந்த மனைவி, ஒரு வாளியில் தண்ணீரை எடுத்து அவ ருடைய தலையில் கொட்டினாளாம்.

நண்பர் அதைப் பார்த்து அதிர்ச்சி அடைய, சாக்ரடீஸ் சிரித்துக்கொண்டே, ''ஒன்றுமில்லை,

நண்பரே! முன்பு இடி இடித்தது; இப்போது மழை பெய்கிறது'' என்றாராம். மனைவியின் கொடுமைகளைச் சாக்ரடீஸ் எவ்வளவு பொறுமையாகத் தாங்கிக்கொண்டார் என்பதற்கு இந்தக் கதையைச் சொல்லுகிறார்கள்.

கி. மு 399-ல் சாக்ரடீஸுக்கு 70 வயதாக இருந்தபோது, அவருடைய விரோதிகள் அவர்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்கள். அவர்மீது இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டார்.

3

அந்தக் குற்றச்சாட்டுகள் வேடிக்கையானவை. ஏதென்ஸ் குடியரசின் கடவுள்களை நம்ப மறுத்து அவர் அலட்சியப்படுத்தினார் என்பது முதல் குற்றச்சாட்டு; ஏதென்ஸ் நகர இளைஞர்களைக் கெடுத்தார் என்பது இரண்டாவது குற்றச்சாட்டு. ஏதென்ஸின் மிகச்சிறந்த பேச்சாளரான லிஸியாஸ் தத்துவஞானி சாக்ரடீஸின் நிலையை விளக்கி ஒரு அறிக்கை எழுதி, அதை சாக்ரடீஸிடம் காண்பித்தார். சாக்ரடீஸ் அதைப் படித்துப் பார்த்து, மரியாதையுடன் அவருக்கு நன்றி செலுத்திவிட்டு அதைப் பயன்படுத்திக்கொள்ள மறுத்துவிட்டார். தமது நிலையினைத் தாமே விளக்கிச் சொல்லுவது தான் ஆண்மை உடையதாக இருக்கும் என்று கருதினார் சாக்ரடீஸ். ஒரு தத்துவ ஞானிக்கு

நியாயத்தை ஸ்தாபிப்பதுதான் முக்கியமே தவிர உயிரை எப்படியாவது காப்பாற்றிக்கொள்ளுவது அல்ல என்று எடுத்துரைத்தார்.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு களுக்குப் பதிலளித்து சாக்ரடீஸ் கீழ்க்கண்டவாறு தனது வாதத்தினைத் தொடங்கினர்.

''ஏதென்ஸ் நகரப் பெருமக்களே! என்மீது குற்றம் சுமத்தியவர்களின் வாதம் எந்த அளவிற்கு உங்களைக் கவர்ந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரையில் அவை களைக் கேட்டுக்கொண்டிருந்தபோது நான் என் னையே மறந்துவிட்டேன். அவ்வளவு நம்பும்படி யாகத் தங்களுடைய வாதத்தை அவர்கள் அழகாக அமைந்திருந்தார்கள். இருந்தாலும், அவர்கள் எடுத்துச் சொன்ன எதுவும் உண்மையல்ல.''

குற்றஞ்சாட்டியவர்கள் அளித்த சாட்சியம் எதனையும் சாக்ரடீஸ் மறுக்கவில்லை. தம்முடைய நோக்கங்களை மட்டும் கண்ணியமான எளிய வார்த் தைகளில் விளக்கினர். ஏதென்ஸின் சேவைக்கு, தமக்கு இருந்த திறமைகளைப் பயன்படுத்தியதாகக் கூறினர்.

ஏதென்ஸ் நகரக் குடிமக்களை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வதே தமது ஆசை என்று எடுத்துச் சொன்னர். கடவுள்களின் ஆணைகளின் பேரிலேயே அந்தப் பணிகளை அவர் செய்ததாகவும், தம்மை விசாரணை செய்கின்ற நீதிபதிகளைவிடக் கடவுள்

களின் கட்டளையினையே தாம் பெரிதாக மதிப்ப தாகவும் சொன்னார்.

அவருடைய பேச்சு, வழக்கு மன்றத்தையே திணறவைத்தது. கடைசியில், அதைவிடப் பெரிய சிக்கலை வழக்கு மன்றத்திற்கு ஏற்படுத்தினார். அவர் சொன்னார்.

''ஏதென்ஸ் நகரப் பெருமக்களே! என்னை விடுதலை செய்வதற்கு நிபந்தனையாக நான் உண்மையினைத் தேடி அலைவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் சொல்லுவீர்களேயானால் உங்களுக்கு நான் பணிவன்போடு சொல்லிக்கொள் ளுவேன்; கடவுள் இட்ட கட்டளையினை ஏற்று நான் உண்மையினைத் தேடி அலைவேனே தவிர, உங்களு டைய நிபந்தனையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். தத்துவ சாஸ்திரத்தோடு எனக்குள்ள தொடர்பினைத் துண்டித்துக் கொள்ள மாட்டேன். நான் சந்திக்கும் மனிதர்களை வழக்கம் போலவே கேள்விகள் கேட்டுக் கொண்டுதான் இருப்பேன், ஞானத்தை உணரவும் உண்மையைக் கண்டறியவும் ஆன்மாவைப் புனிதப் படுத்திக் கொள்ளவும் முயற்சிகளை மேற்கொள்ளாமல் பணத்துக்கும் பதவிக்கும் அலைகின்ற மனிதர்களைப் பார்த்து, இதற்காக நீங்கள் அவமானப்பட வேண்டாமா என்று கேட்கவே செய்வேன். மரணம் என்பது என்ன என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை, அது சிறப்பானதாகக்கூட இருக்கலாம். அதைக் கண்டு நான் பயப்படவில்லை. கடமையிலிருந்து ஓடுவது மோசமானது என்று எனக்குத் தெரியும்.

நிச்சயமாகத் தீமை என்று தெரிந்ததைவிட நன்மையாக இருக்கக் கூடும் என்கிற ஒன்றையே நான் ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன்.''

சாக்ரடீஸின் இந்தப் பேச்சு, வழக்கு மன்றத்தை வியப்பிலும் குழப்பத்திலும் ஆழ்த்தியது. வழக்கு மன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்தது. ஏதென்ஸ் நகரத்துச் சட்டப்படி மரண தண்டனைக்கு மாற்றாக நாடு கடத்தப்படும் தண்டனையை அவருக்கு அளிக்க வழக்கு மன்றம் தயாராக இருந்தது சாக்ரடீஸ் தம்மை ஒரு பொதுஜன நன்மை விரும்பி போலவே நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஒலிம்பிக் விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களைப் பொதுச் செலவில் விருந்தளித்து எப்படி பராமரிக்கிறார்களோ அது போல பொதுஜன நன்மை கருதித் தம்மையும் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மூன்று மினா(மூன்று பவுன்கள்) அபராதம் செலுத்த அவர் சம்மதித்தார். அதை 30 ஆக்கிக்கொள்ளும்படி நண்பர்கள் வேண்டினார்கள். அதை அவர் மறுத்து விட்டார்.

சாக்ரடீஸின் போக்கைப் பார்த்து வழக்கு மன்றம் ஆத்திரம் அடைந்தது. ஹெமலாக் என்கிற விஷ மருந்தைக் குடித்துச் சாக்ரடீஸ் இறக்க வேண்டுமென மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்தது. சாக்ரடீஸ் அந்தத் தீர்ப்பை அமைதியாக ஏற்றுக் கொண்டு, வழக்கு மன்றத்தைப் பார்த்து, இறுதியாகச் சொன்னார், ''நான் உங்களைப் பிரியும்

நேரம் வந்துவிட்டது. நான் சாகப்போகிறேன். நீங்கள் வாழப்போகிறீர்கள். இரண்டு பேரில் யார் சிறப்பான நிலைக்குப் போகிறோம் என்பது ஆண்டவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.''

4

ஏதென்ஸ் நகரத்தில் மத சம்பந்தப்பட்ட பல திருவிழாக்கள் நடைபெற்றதால் சாக்ரடீஸின் மரண தண்டனை நிறைவேறுவது மூன்று வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. கால்களிலும் கைகளிலும் விலங்குகள் பூட்டப்பட்டுச் சாக்ரடீஸ் மரண தண்டனையை எதிர்நோக்கிச் சிறைச்சாலையில் காத்திருந்தார். அந்த நிலையிலும் தம்மைப் பார்க்க வந்த நண்பர்களிடம் இனிமையாக உரையாடினார். அவருடைய அன்புக்குப் பாத்திரமான சீடர்களில் ஒருவரான கிரீட்டோ, சிறையிலிருந்து சாக்ரடீஸ் தப்பிப் போக எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, அதை அவரிடம் வந்து தெரிவித்தார். சாக்ரடீஸ் அந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கு மன்றம் சட்டப்படி தமக்கு மரண தண்டனை அளித்திருப்பதால் அதை ஏற்று, மரணம் அடைவதுதான் சட்டத்தை மதிக்கும் செயலாகும் என்று சாக்ரடீஸ் அறிவுறுத்தினார்.

கடைசித் தினத்தன்று சாக்ரடீஸைப் பார்க்க அவருடைய நண்பர்கள் வந்தார்கள். விலங்குகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். அவ

ருடைய மனைவி சாந்திபியும் மகனும் உடன் இருந்தார்கள். சாந்திபி அழுதுகொண்டிருந்தாள். ''உங்கள் நண்பர்கள் உங்களோடும் நீங்கள் அவர்களோடும் பேசுவது இதுவே கடைசித் தடவை'' எனக் கூறி, அவள் தேம்பித் தேம்பி அழுதாள். அவளைச் சாந்தப்படுத்தி வீட்டுக்கு அழைத்துச் செல்லும்படி தமது நண்பர் கிரிட்டோவைச் சாக்ரடீஸ் கேட்டுக்கொண்டார். அவள் அங்கிருந்து சென்ற பிறகு, விலங்குகள் பூட்டப்பட்டதால் உடலில் ஏற்பட்ட தழும்புகளைக் கைகளால் தேய்த்துக்கொண்டே இன்பத்துக்கும் துன்பத்துக்கும் உள்ள உறவு பற்றி நண்பர்களிடம் சுவாரஸ்யமாக உரையாடத் தொடங்கினார் சாக்ரடீஸ். வாழ்க்கை பற்றியும் மரணம் பற்றியும் ஆன்மாவின் அழியாத் தன்மை பற்றியும் அவர்கள் நெடுநேரம் பேசிக்கொண்டே இருந்தார்கள். பிற்பகல் சாக்ரடீஸ் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் குளிக்கப் போனார். அவர் திரும்பி வந்த போது சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. அதுதான் அவருடைய மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய நேரம்.

அரசாங்க அதிகாரி ஒருவர் உள்ளே நுழைந்தார். கடமையைச் செய்ய வேண்டி இருப்பதற்காக வருத்தம் தெரிவித்த அவர், தம்மை அறியாமலே தேம்பித் தேம்பி அழுதார். சூரியன் இன்னும் அஸ்தமிக்காததால் சாக்ரடீஸ் சிறிது நேரம் காத்திருக்கலாம் என்று விருப்பம் தெரிவித்தார் கிரிட்டோ. நண்பனின் அற்ப ஆசையினைப் பார்த்துச் சிரித்த சாக்ரடீஸ், விஷத்தைக் கொண்டுவரும்படி

கேட்டுக்கொண்டார். விஷக் கோப்பையைக் கையி லேந்திச் சிறிது விஷத்தைக் கடவுளுக்குப் பிரார்த் தனைசெய்து பூமியில் ஊற்றிவிட்டு, மீதி விஷத்தை மகிழ்ச்சியோடு அருந்தினார். சுற்றியிருந்த நண்பர் கள் துயரம் தாங்கமாட்டாமல் அழுதார்கள். சாக்ர டீஸ் அவர்களைப் பார்த்து, ''எதற்காக அழுகிறீர் கள்? பெண்கள்தான் இப்படி அழுவார்கள் என்று எதிர்பார்த்து அவர்களை முன்கூட்டியே அனுப்பி விட்டேன். நான் மகிழ்ச்சியாகவே இறக்க விரும்பு கிறேன். நீங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும்'' என்றார்.

விஷம் வேகமாக வேலை செய்யத் தொடங் கியது. சிறிது சிறிதாகச் சுய நினைவு இழக்க ஆரம்பித்தார் சாக்ரடீஸ். அந்த நிலையிலும் கடன் காரார்களுக்குத் தாம் கொடுக்க வேண்டிய பாக்கி யைக் கொடுத்துவிடும்படி நண்பர்களுக்கு நினைவு படுத்திவிட்டே அவர் மாண்டு போனார்.

சாக்ரடீஸின் உடலைப் புதைத்த உடனே ஏதென்ஸ் நகர நீதிபதிகள் தங்கள் தவற்றினை உணர்ந்தார்கள். சாக்ரடீஸைக் குற்றம் சாட்டிய வர்களை, மக்கள், சமூக விரோதிகளாகப் பாவிக்கத் தொடங்கினார்கள். சாக்ரடீஸைக் குற்றம் சாட்டிய சிலர் அந்த அவமானம் தாங்கமாட்டாமல் தூக்குப் போட்டுக்கொண்டார்கள். ஏதென்ஸ் நகரத் தெருக் களில் அறிவாலயமாக நடமாடிய சாக்ரடீஸ் இப்போது இல்லாததால் அவருக்கு வெண்கலத்தில் உருவச்சிலை செய்யும்படி லிஸிபஸ் என்கிற சிற்பிக்கு ஏதென்ஸ் நகர மக்கள் ஆணை பிறப்பித் தார்கள்.

வானத்தில் உலவிய தத்துவ சாஸ்திரத்தை பூமிக்குக் கொண்டுவந்தவர் சாக்ரடீஸ் என எழுதினார் சிந்தனையாளர் ஸிஸரோ. மனித சிந்தனையில் அவர் ஒரு சகாப்தம் என வர்ணித்தார் பிளேட்டோ.

ஒரு சமயம் சாக்ரடீஸின் உருளும் விழிகளையும் தடித்த உதடுகளையும் சப்பை மூக்கையும் குள்ளமான உருவத்தையும் பார்த்த ஒரு உடற்கூறுவல்லுநர், அவருடைய தோற்றத்தைக்கொண்டு அவர் கேவலமான நடத்தை உடையவராகவும் ஒழுக்கம் கெட்டவராகவும் இருப்பார் என்று அவரைப்பற்றி அனுமானித்துச் சொன்னார். அதைக்கேட்ட சாக்ரடீஸின் சீடர்கள், அந்த உடற்கூறு வல்லுநர்மீது ஆத்திரம் அடைந்து, அவரைக் கொலை செய்ய முயன்றார்கள். சாக்ரடீஸ், அவர்களைத் தடுத்து அந்த உடற்கூறு வல்லுநர் சொல்லியவெல்லாம் உண்மைதான் என்றும், தம்முடைய சிந்தனை சக்தியாலும் பகுத்தறியும் ஆற்றலாலும் தமது தீய உணர்வுகளை வென்றுவிட்டதாக விளக்கம் சொன்னார்.

இந்தச் சம்பவம் சாக்ரடீஸ் என்கிற தத்துவ ஞானியின் ஆன்மிக பலத்தை விளக்க சிறந்த எடுத்துக்காட்டாகும். கேள்விகளின் மூலம் தெளிவினை ஏற்படுத்திச் சிந்தனையாளர் சாக்ரடீஸ் கண்ட வழியினை உலகம் இன்றைக்கும் புறக்கணித்துவிடவில்லை என்பதே அவருடைய வரலாற்றுப் பெருமைக்கு நிலையான சான்றாகும்.

அரிஸ்டாட்டல்

(கி. மு. 384—கி. மு. 322)

மாஸிடோனியா மன்னரான பிலிப்புக்கு ஆண் குழந்தை பிறந்தபோது அவன் அவசர அவசரமாக அரிஸ்டாட்டலுக்கு ஒரு செய்தி அனுப்பினுன். அந்தச் செய்தி இதுதான்: ''எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. அதற்காக நான் கடவுளர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆண் குழந்தை எனக்குப் பிறந்தது என்பதற்காக அல்ல நான் நன்றி செலுத்துவது, எனக்குப் பிறந்த குழந்தை உங்களுடைய காலத்தில் பிறந்ததே என்பதற்காக நான் தெய்வங்களுக்கு நன்றி பாராட்டுகிறேன். தாங்கள் என் மகனுக்குப் பயிற்சியும் கல்வியும் அளிப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்படி அளிக்க நீங்கள் ஒப்புக்கொண்டால், அரியணையில் அமர்ந்து புகழுடன் ஆட்சி செய்வதற்கான எல்லாத் தகுதிகளையும் அவன் பெறுவான் என்பதில் சந்தேகம் இல்லை.''

அதன்படியே மன்னன் பிலிப்பின் குழந்தை அரிஸ்டாட்டலிடம் கல்வி பயின்றது. உலகப் பெரும்புகழ் பெற்ற மாவீரன் அலெக்சாண்டராகப் பிற்காலத்தில் திகழ்ந்தது. மாஸிடோனியா மன்னன், அரிஸ்டாட்டலுக்கு அன்று எழுதிய கடிதம், அவர்மீது அவன் வைத்திருந்த நம்பிக்கை

யின் அடையளாம் மட்டுமல்ல; சிந்தனையுலகில் அவர் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கும் சான்று.

மனித எண்ணங்களை வளப்படுத்தியதில் அரிஸ்டாட்டலின் பங்கு மகத்தானது. நவீன அரசியல் தத்துவத்திற்கு அஸ்திவாரமிட்டவரே அவர்தான். துன்பியல் நாடகங்களுக்குத் தேவையான ஒருமைத் தன்மையினை உருவாக்கிக் காட்டியவரும் அவரே. ''ஆத்மாவைப்பற்றி' என்கிற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரைதான் மனோ தத்துவ சாஸ்திரத்தின் அஸ்திவாரமாக விளங்குகிறது. உடற்கூறுபற்றிய ஆராய்ச்சியிலும் அவர் ஒரு முன்னோடியாக விளங்கினார். இன்றைக்குச் சமுதாயத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட பல தத்துவங்களின் பிதாவே அவர்தான். மாஸிடோனிய மன்னன் பிலிப் அவருக்குக் கடிதம் எழுதியபோது அரிஸ்டாட்டலின் வயது 30.

2

அரிஸ்டாட்டல் கி. மு. 284-ல் பிறந்தார். அவர் தந்தை அரசவையில் வைத்தியனாக இருந்தார். பேரறிஞர் பிளேட்டோ நடத்திய கலைக்கழகத்தில் மாணாக்கராகச் சேர்ந்து பயின்றார், அரிஸ்டாட்டல். அந்த மாணாக்கரைப் பள்ளிக்கூடத்தின் மூளை என்றே பிளேட்டோ அழைப்பார். பிளேட்டோ இறந்தபிறகு அந்தப் பள்ளியிலிருந்து விலகினார் அரிஸ்டாட்டல். அதே பள்ளியில் பயின்ற ஹெர்மியாஸ் என்பவர் அரிஸ்டாட்டலுக்கு நெருங்கிய

நண்பராக இருந்தார். ஹெர்மியாஸின் உறவுப் பெண் ஒருத்தியைத்தான் அரிஸ்டாட்டல் திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணத்தின் விளைவாக அவருக்கு ஒரு மகனும் பிறந்தான். ஹெர்மியாசும் அரிஸ்டாட்டலும் நெருக்கமான நண்பர்களாகவே கடைசிவரையில் பழகினார்கள். பாரசீகர்கள் ஹெர்மியாஸைப் பிடித்துச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். தமது நண்பர் ஹெர்மியாஸின் மறைவு குறித்து அழகான இரங்கற்பா ஒன்றை அரிஸ்டாட்டல் எழுதினார்.

பிராணி நூல் பற்றி அவர் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தபோது இளவரசர் அலெக்ஸாண்டருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி அழைக்கப்பட்டார். அலெக்ஸாண்டர் பிறந்தபோது அவருடைய தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை இப்போது அரிஸ்டாட்டல் நிறைவேற்றினார். உலகத்தை வெல்லும் ஆற்றல் படைத்த அலெக்சாண்டர், மனித சிந்தனையை வென்று தம் வயப்படுத்தும் அரிஸ்டாட்டலின் மாணுக்கரானர்,

அலெக்சாண்டருக்கு மட்டும் தனியே பாடம் சொல்லித்தரும் ஆசிரியராக அரிஸ்டாட்டல் நியமிக்கப்படவில்லை. அக்காலத்திய கிரேக்க வழக்கமும் அப்படி இருக்கவில்லை, அரிஸ்டாட்டல் பள்ளி ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாட்டினை மாஸிடோனியா மன்னனுன பிலிப்பே செய்து கொடுத்தார். அரிஸ்டாட்டலிடத்தில் பயின்ற மாணவர்களுள் அலெக்சாண்டரும் ஒருவராக இருந்தார்.

குருகுலவாசம் போல அவரோடு வாழந்தே மாணுக்கர்கள் கல்வி பயின்றூர்கள்.

எல்லா மாணுக்கர்களும் அரிஸ்டாட்டலிடம் பூஜா மனேபாவத்துடனேயே பழகினூர்கள். அலெக்சாண்டர் மட்டும் அரிஸ்டாட்டலின் அறிவையும் ஆற்றலையும் வியந்து பாராட்டி மரியாதையுடன் நடந்துகொண்டாரே தவிர, குருவுக்கு தம்மை ஒரு அடிமைபோல் ஆக்கிக்கொண்டுவிடவில்லை.

இதுபற்றி சுவையான நிகழ்ச்சி ஒன்று உண்டு. அரிஸ்டாட்டல் தம்மிடம் படித்துக்கொண்டிருந்த இளவரசன் ஒருவனை அழைத்து, ''நீ பட்டத்துக்கு வந்தால் நெருக்கடியான நேரங்களில் எப்படி நடந்துகொள்வாய்'' என்று கேட்டார். அந்த இளவரசன், நெருக்கடிகளின் போது முதியவர்களின், அதிலும் குறிப்பாகத் தம்முடைய ஆசிரியரின் யோசனையினைக் கேட்டு நடந்துகொள்வேன் என்று பதிலளித்தான். வேறு சில இளவரசர்களும் அதே பதிலைத்தான் சொன்னூர்கள். இந்தக் கேள்வியை அலெக்சாண்டரை நோக்கிக் கேட்டார் அரிஸ்டாட்டல். அலெக்சாண்டர் சொன்னூர்: ''இந்தக் கேள்விக்கு இப்போது என்னூல் பதில் சொல்ல முடியாது. நாளைக்கு என்ன நடக்கும் என்பதை அறிந்துகொள்வது யாருக்குமே சாத்தியமில்லை. நேரம் வரும்போது சந்தர்ப்பங்கள் எப்படி இருக்கின்றனவோ அவற்றை ஒட்டி நிலைமையைச் சமாளிக்க முயற்சி செய்வேன். கேட்க வேண்டிய நேரத்தில் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டால்

அந்தச் சூழ்நிலைக்கு எது பொருத்தமான பதிலோ அதை என்னால் அப்போது சொல்லமுடியும்.''

அலெக்சாண்டரின் பதிலை அரிஸ்டாட்டல் வெகுவாகப் பாராட்டினார். அரிஸ்டாட்டலுக்கு பிலிப் எல்லா மரியாதைகளையும் செய்தார். பாழடைந்த இடத்தில் அவருக்கென்றே புதிய நகரம் ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்தார். அக் காலத்தில் ஒரு தத்துவ ஞானிக்கு மன்னன் காட்டிய மிகப்பெரிய மரியாதை இது.

ஹோமரின் நூல்களில் அலெக்சாண்டருக்கு மிகுந்த ஈடுபாட்டினை ஏற்படுத்தினார் அரிஸ் டாட்டல். ஹோமரிடம் அலெக்சாண்டருக்கு ஏற்பட்ட பக்தி கடைசி வரையில் நீடித்தது. போர்க் களத்துக்குச் செல்லும்போதுகூட ஹோமரின் காவியத்தை தம்முடனேயே எடுத்துச் செல்லுவா ராம் அலெக்சாண்டர். அரசனுடைய நடத்தை எப்படி அமைய வேண்டும் என்பதற்கு நிறைய தத்துவங்களைச் சொன்னவர் அரிஸ்டாட்டல்.

அரிஸ்டாட்டலிடம் அலெக்சாண்டர் தமது வாழ்நாள் முழுவதும் நன்றி உடையவராக இருந் தார். ''நான் பிறந்ததற்கு என் தந்தை காரணம் என்றால், நான் மனிதனாக வாழ்வதற்கு அரிஸ் டாட்டல்தான் காரணம்'' என்று அலெக்சாண்டர் அடிக்கடி குறிப்பிடுவாராம். அரிஸ்டாட்டல் உடற் கூறு பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தபோது அவருக்கு உதவி செய்வதற்காக ஆயிரம் பேர்களை

அலெக்சாண்டர் கொடுத்திருந்தார். பறவைகள், மிருகங்கள், மீன்கள் ஆகியவற்றின் பழக்க வழக்கங்களைக் கண்டுணர்ந்து அரிஸ்டாட்டலிடம் தெரிவிக்கும் பணி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அரிஸ்டாட்டலின் ஆராய்ச்சிகளுக்காக ஏராளமான பணத்தைச் செலவு செய்தார், அலெக்சாண்டர். அவருடைய ஆராய்ச்சிக்கு தேவையான கையெழுத்துப் பிரதிகள் அவருக்குக் கிடைக்க ஏராளமான பொருளைச் செலவு செய்தார் அலெக்சாண்டர்.

3

அலெக்சாண்டர் ஆசியாவுக்கு திக்விஜயம் புறப்பட்டபோது, அரிஸ்டாட்டல் ஏதென்ஸ் நகருக்குத் திரும்பினார். கிரேக்கத்தின் கலாசாரத்துக்கு மட்டுமல்லாமல் உலகக் கலாசாரத்துக்கே தலைமைப் பீடமாய் அப்போது ஏதென்ஸ் விளங்கியது. 50 வயதில் அரிஸ்டாட்டல் ஏதென்ஸ் நகரில் ஒரு பள்ளியை நிறுவினார். லிஸியஸ் தேவதையின் ஆலயத்துக்கருகில் அந்தப் பள்ளி அமைந்திருந்ததால் அது லிஸியம் என்றே அழைக்கப்படலாயிற்று. அந்தக் காலத்தில் மிகச்சிறந்த தத்துவஞானி எனப் புகழ்பெற்றிருந்த அரிஸ்டாட்டலிடம் கல்வி பயில ஏராளமான மாணுக்கர்கள் வந்து குழுமினார்கள். அந்தப் பள்ளியில் பயின்ற மாணுக்கர்களை நடமாடும் தத்துவஞானிகள் என்றே மக்கள் அழைத்தார்கள்.

அரிஸ்டாட்டலின் போதனைகள் பல்வேறு துறைகளைத் தழுவி இருந்தன. ஆதாரங்களை அடிப் படையாக வைத்தே அவர் தத்துவங்களை உருவாக் கினார். அவர் ஒரு விஞ்ஞானியாகவும் விளங்கிய தால் எதையும் விஞ்ஞான நோக்கிலேயே ஆராய்ந்து தெளிந்தார். மருத்துவத்துறையிலும் அவர் வல்லுந ராக விளங்கினார். அறுவை சிகிச்சை முறைகளை யும் அவர் கையாண்டதாகச் சொல்லப்படுகிறது.

அலெக்சாண்டர் பாபிலோனில் இறந்தபிறகு அரிஸ்டாட்டல் பலவிதமான சந்தேகங்களுக்கு ஆளானார். அவரை மாஸிடோனியாவின் ஆதர வாளர் எனக் கூறி ஏதென்ஸ் நகரத்தார் அவருக்கு மரணதண்டனை விதிக்கச் சூழ்ச்சி செய்தார்கள். ஹெம்லாக் விஷம் குடித்து சாக்ரடீஸ் மரணம் அடைந்த சோகக்கதை அரிஸ்டாட்டலுக்குத் தெரியு மாதலால் அந்தக் கதி தமக்கும் ஏற்படுவதைத் தவிர்க்க முயன்றார். ஏதென்ஸ் நகரத்தை விட்டு வெளியேறி யுபேயாத் தீவிலுள்ள சால்சிஸ் என்னும் இடத்தில் அடைக்கலமானார். அங்கு போய்ச் சில ஆண்டுகளிலேயே, அதாவது, கி. மு. 322-ல் அவர் காலமானார்.

4

அரிஸ்டாட்டல் எப்போதும் நல்ல உடையே அணிந்திருந்தார் என்று சொல்லப்படுகிறது. இது தத்துவஞானிகளிடம் சாதாரணமாகக் காணப் படாத ஒரு தன்மையாகும். தம்முடைய தீபத்தை

உலகத்துக்கே ஒளி தரும் பெரிய ஜோதியாக்கினர் அரிஸ்டாட்டல் என்று ஆங்கிலக் கவிஞர் ட்ரைடன் அவரைப் பாராட்டுகிறார்.

அரிஸ்டாட்டல் பல்துறை மேதையாக விளங்கினார். அவருடைய சிந்தனையால் பிற்காலத்தில் டான்டே, ஸ்பென்சர், கோதே போன்ற பேரறிஞர்கள் கவரப்பட்டார்கள்.

அரிஸ்டாட்டலின் சிந்தனாவழிக் கோட்பாடுகள் தாம் கிறிஸ்தவ தத்துவ ஞானத்தின் செயல்முறைகளாக அமைந்தன.

''ஆர்கனன்'' என்கிற அவருடைய நூலில் தர்க்க சாஸ்திரத்தின் விதிகளை அவர் அமைத்தார். ''ரெடாரிக்'' என்கிற அவருடைய நூல் தன்வசப் படுத்தும் கலையில் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இலக்கிய நாடகத் துறைகள்பற்றி அரிய விமரிசனங்களை அவர் எழுதியிருக்கிறார். ஒழுக்கம் பற்றியும் அரசியல் பற்றியும் அவர் வெளியிட்டுள்ள அரிய கருத்துக்கள் இன்றுவரை மனித இனத்துக்கு வழி காட்டிக்கொண்டிருக்கின்றன.

அரிஸ்டாட்டல் வாழ்ந்து ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. ஆனால், இன்றுவரை அவருடைய சிந்தனைகள் மனித இனத்தின்மீது கொண்டிருக்கும் ஆதிக்கம் சற்றும் தளரவில்லை.

இதுவே அவர் புகழுக்குச் சான்று; அவருடைய சாதனைக்கு ஒரு நிரந்தரமான நினைவுச் சின்னம்.

நபிகள் நாயகம்

(கி. பி. 570—632)

''அல்லா ஹூ! அக்பர்! லா இல்லா இல் அல்லா! மகமது உர்-ரசூல் உல்லா!'' இந்த கோஷம் பல நூற்றூண்டுகளாக உலகத்தின் பல்வேறு பகுதிகளில் ஒலித்து, ஆண்டவனின் பெருமையை உலகுக்கு உணர்த்தி இருக்கிறது. இதன் பொருள், ''கடவுள் பெருமை மிக்கவராக இருக்கிறூர்! உண்மையான கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை! மகமதுவே அந்தக் கடவுளின் தூதராவார்!'' என்பதாகும்.

ஆண்டவனின் தூதராகப் பல கோடி முஸ்லீம்களால் கருதப்படும் மகமது எப்படிப்பட்ட பெரியார்? அவர் புரிந்த அதிசயங்கள் என்ன? இந்தக் கேள்விகளுக்கு வரலாறு அளிக்கும் பதில் சுவையானது.

மகமது கி. பி. 520-ம் ஆண்டு அரேபியாவில் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய குடும்பம் குரேஷி இன வழியில் வந்த குடும்பமாகும். இஷ்மாயிலும் ஆபிரகாமும் மகமதுவின் முன்னேர்கள் என்று கருதப்படுகிறூர்கள். காபாவைக் கட்டியவரே ஆபிரகாம் என்று முஸ்லீம்கள் நம்புகிறூர்கள். மகமது பிறந்தபோது மக்கா மிகவும் மோசமான சிலை வழிபாட்டில் மூழ்கி இருந்தது.

மகமதுவின் தந்தையார் பெயர் அப்துல்லா; பாட்டனுர் பெயர் அப்துல் முத்தலீப். மகமதுவின்

தந்தை அப்துல்லா, மகமது பிறப்பதற்கு முன்ன தாகவே இறந்துவிட்டார். மகமது சிறு பையனுகை இருக்கும் போதே அவருடைய தாயார் அமீனு கால மானுர். ஆறு வயதிலேயே பெற்ருேர்களே இழந்த அநாதையானுர் மகமது.

மகமதுவைப் பராமரிக்கும் பொறுப்பினை அவருடைய தாத்தாவான அப்துல் முத்தலிப் ஏற்றுக்கொண்டார். ஆனுல் மகமதுவின் துரதிர்ஷ்டம், அவருடைய தாத்தாவும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இயற்கை எய்தினுர். அதன் பின் முகமது அவருடைய சிறிய தந்தையான அபூதலீபினிடம் வளரத் தொடங்கினுர். அபூதலீப் அந்தச் சிறுவனை மிகவும் அன்புடன் பராமரித்தார். தம் முடனேயே படுக்க வைத்துக்கொள்ளுவார். தமது அருகிலேயே அமர்ந்து உணவு கொள்ளச் செய்வார். வெளியில் எங்கு போனுலும் உடன் அழைத்துச் செல்லுவார். இந்த அன்பின் நெருக்கம் விரைவிலேயே ஒரு சோதனைக்கு உள்ளாயிற்று. அபூதலீப் சிரியாவுக்கு நீண்டதூரப் பயணம் மேற்கொள்ள வேண்டி வந்தது. சிறிய தந்தையை விட்டுப் பிரிந்திருக்க மகமது பெரிதும் மனம் வருந்தினுர். இதைப் பார்த்த அபூதலீப் பன்னிரண்டு வயதுச் சிறுவனுன மகமதுவையும் தம்முடன் சிரியாவுக்கு அழைத்துச் செல்லுவது என்று முடிவு செய்தார். அந்தப் பயணம் பல மாதங்கள் நீடித்தது. பல்வேறு இன மக்களோடும் மத நம்பிக்கைகள் கொண்டவரோடும் பழகுகின்ற வாய்ப்பினை அது மகமதுவிற்குக் கொடுத்தது.

மகமதுவின் இளமைக் காலத்தில் அவருக்கு வேறு ஒரு அனுபவமும் ஏற்பட்டது. மக்கா பள்ளத்தாக்கிலும் அதைச் சுற்றியிருந்த பிரதேசத்திலும் இரண்டு இனங்களுக்கு மத்தியில் பெரும் கலவரம் மூண்டது. அந்தக் கலகத்தில் சம்பந்தப்பட்ட ஒரு இனம் மகமது சார்ந்திருந்த குரேஷி இனம், தமது சிறிய தந்தைக்காக மகமதுவும் அந்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருந்தது. ஆனால், அவர் அதில் நேரடிப்பங்கு எதுவும் பெறவில்லை. எதிரிகள் விடும் அம்புகள் கீழே விழுந்தவுடன் அவற்றைப் பொறுக்கி எடுத்து வந்து தமது சிறிய தந்தையிடம் கொடுப்பதுதான் அவர் வேலை.

மகமதுவின் இளமைக் காலத்தின் ஒரு பகுதி மக்கா பள்ளத்தாக்கிலும் குன்றுகளின்மீதும் ஆடுகளை மேய்ப்பதில் கழிந்தது. எந்த வேலையினைச் செய்தாலும் அதை முழுமையான மன ஈடுபாட்டோடு செய்ததால் 'ஆல் அமீன்' என்கிற பட்டத்தையும் மகமது பெற்றார். 'ஆல் அமீன்' என்றால் 'நம்பிக்கைக்குப் பாத்திரமான' என்பது பொருள்.

அவருடைய இளமைக் காலம் விழுமிய ஒழுக்கம் உடையதாகவும் அடக்கம் நிறைந்ததாகவும் இருந்தது. மகமது வாழ்ந்த காலத்தில் மக்காவில் நிலவிய ஒழுங்கீனத்தின் பின்னணியில் பார்க்கும்போது மகமது மிக உன்னதமான தூய வாழ்க்கையினை வாழ்ந்தார் என்றேதான் சொல்ல வேண்டும். பண்பட்ட மனம் படைத்தவராகவும் சிந்தனைத் தெளிவுடையவராகவும் செல்வத்தில் ஈடுபாடு இல்லாதவராகவும் மகமது இளமைக் காலத்தி

லேயே வாழ்ந்தார். அவருடைய இத்தகைய வாழ்க்கை அபுதலிபின் குடும்பச் சூழ்நிலைக்கு ஏற்ற தாக இருந்தது.

அபுதலீபின் குடும்பம் அப்படி ஒன்றும் பணக் காரக் குடும்பம் அல்ல. ஆகவே தமது வாழ்க்கைத் தேவைகளைத் தாமே சம்பாதித்துக்கொள்ளும்படி மகமதுவிற்கு அபூதலீப் யோசனை கூறினார். குரேஷிய வம்சத்தைச் சேர்ந்த கதீஜா என்ற சீமாட் டியின் ஒட்டகத் தொடருக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளும் பணியை மேற்கொள்ளும்படி மகமது விற்கு அபூதலீப் யோசனை கூறினார். மகமதுவும் அந்தப் பணியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண் டார். ஏற்றுக்கொண்ட கடமையை அவர் செம் மையாகச் செய்து முடித்ததைப் பார்த்து கதீஜா மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மகமதுவின் கவர்ச்சி யான தோற்றமும் பண்பட்ட பழக்க வழக்கங் களும் கதீஜாவை மிகவும் கவர்ந்தன. 40 வயது விதவையான கதீஜா 24 வயதான மகமதுவைத் திருமணம் செய்துகொண்டார்.

2

மகமதுவைவிடக் கதீஜா பதினைந்து வயது பெரியவராக இருந்தாலும் அவர்களுடைய திருமண வாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியதாகவே இருந்தது. இருவரும் மனம் ஒத்த தம்பதிகளாக வாழ்ந்தார் கள். இரண்டு பிள்ளைகளும் நான்கு பெண்களும் அவர்களுக்குப் பிறந்தார்கள். ஒரு பெண்ணைத் தவிர இதரக் குழந்தைகளெல்லாம் மகமதுவின் வாழ்நாளிலேயே இறந்து போயின. உயி

ரோடிருந்த ஒரே பெண்ணான ஃபாத்திமா, அலி என்பவரை மணந்துகொண்டார்.

அந்தக் காலத்தில் அரேபியாவில் ஒரு ஆண் பல பெண்களைத் திருமணம் செய்துகொள்ளுவது சாதாரணமாக வழக்கத்தில் இருந்தது. இருந்தும் மகமது தம்மைவிட வயதில் மூத்த மனைவியிடம் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டவராய், கதீஜா வாழ்கின்ற வரையில் ஏக பத்தினிவிரதமுடையவ ராகவே இருந்தார். தமது 65-வது வயதில் கதீஜா காலமானார். அப்போது மகமதுவிற்கு வயது 50.

கதீஜாவின் மரணத்திற்குப் பிறகு மக்காவி லிருந்த சவூதா என்கிற விதவையை முகமது திரு மணம் செய்துகொண்டார். அதற்குப் பிறகு மதீனாவில் தமது நண்பர் அபூபக்கரின் மகளான ஆயிஷாவை விவாகம் செய்துகொண்டார்.

கதீஜாவைத் திருமணம் செய்த சில வருடங் களுக்குள் மக்காவிலிருந்த புனித இல்லமான காபாவைத் திரும்பக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்கான அடித்தளக் கல்லினை அமைக்கும் உரிமை யாருக்கு என்பதுபற்றி குரேஷி குடும்பத்தாரிடையே பெரும் தகராறு மூண்டது. அந்தத் தகராறைத் தீர்த்து வைக்கும் நடுவராக மகமது தேர்ந்தெடுக்கப்பட்டார். அப் போது அவருக்கு வயது 35. மகமது ஒரு துணியை, பூமியிலே விரித்து, அதன் மத்தியில் அஸ்திவாரத்தில் வைக்கப்பட இருக்கும் புனிதமான

கல்லினை வைத்தார். உரிமைக்காகச் சச்சரவில் ஈடு பட்டிருந்த நான்கு குரேஷி குடும்பத்தினரையும் அழைத்து மூலைக்கொருவராக அந்தத் துணியைப் பற்றச் சொன்னார். அப்படியே துணியை உயர்த்தச் சொல்லி, அந்தப் புனிதக் கல்லை நான்கு குடும்பத் தினர் மூலமாகவே எடுத்துச் சென்று, அஸ்தி வாரத்தில் வைக்கச் செய்தார். அதன் மூலமாக அந்தக் கௌரவத்தை நான்கு குடும்பத்தினரும் அமைதியாகப் பகிர்ந்துகொண்டார்கள்.

ஆழமான மத உணர்வு கொண்ட மகமது ஹீராமலை அடிவாரத்திலுள்ள குகை ஒன்றில் போய்த் தனிமையான சிந்தனையில் ஆழ்ந்திருப்பார். அந்த மலை மக்காவிலிருந்து வடக்கே மூன்று மைல் தொலைவில் இருந்தது. சில சமயங்களில் பல நாட்களை தியானத்திலும் பிரார்த்தனையிலும் அந்தக் குகையில் கழித்திருக்கிறார். அப்படி அவர் தியா னத்திலிருந்த சமயத்தில்தான், அரேபியாவில் விக்கிரக ஆராதனையைத் தூக்கி எறிந்து, அல்லா வின் உண்மையான மார்க்கத்தை உலகத்திற்குப் போதிக்கும்படி அவருக்கு உத்தரவு கிடைத்தது.

அந்தக் குரலைக் கேட்ட மகமது முதலில் பயத் தினால் நடுக்கமுற்றார். பிறகு, கடவுளின்மீது முழுமையான நம்பிக்கை வைத்து ஒன்றே கடவுள் என்பதனையும், விக்கிரக வழிபாடு கூடாது என்ப தனையும், மனித சமுதாயத்தின் சகோதரத்துவத் தையும் மக்களிடத்திலே போதிப்பது என்கிற திடமான முடிவுக்கு வந்தார்.

ஆனால், அந்தப் பணி அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. அவர் சார்ந்த இனமான குரேஷி இனத்தவர் உருவ வழிபாட்டில் அழுத்தமான நம்பிக்கை உடையவர்கள். அந்தச் சமயத்தில் மக்காவில் மட்டும் 365 வெவ்வேறு உருவங்கள் வழிபாடு செய்யப்பட்டன. மகமதுவின் உருவ வழிபாட்டு எதிர்ப்புக் கருத்திற்குக் கடுமையான எதிர்ப்புத் தோன்றியது. அவர் பல விதமான கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். அவர்மீது கல் லெறிந்து விரட்டினார்கள். அவரைப் பல விதமான அவமானங்களுக்கு உள்ளாக்கினார்கள். அவருடைய உயிருக்கே பெரிய ஆபத்து நேர்ந்தது. இவற்றில் எதையும் பொருட்படுத்தாமல் மகமது, உண்மையான கடவுள் அல்லாவே என்றும், உருவ வழிபாடு கூடாது என்றும் தொடர்ந்து உபதேசம் புரிந்தார்.

மக்கள் மெல்ல மெல்ல மாற்றம் அடைந்தார்கள். அவரிடம் பக்தி உணர்வோடு வாழ்ந்த அவருடைய மனைவி கதீஜாவே முதலில் மன மாற்றம் அடைந்தார். மிகவும் செல்வாக்குப் படைத்த தனவந்தரான அபூபக்கர், மகமதுவின் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார். அபூபக்கர் தெளிந்த சிந்தனை உடையவர் என்று மக்கா வாசிகளால் கருதப்பட்டதால் மகமதுவின் மார்க்கத்திற்கு ஆதரவாளர்கள் ஏற்படத் தொடங்கினார்கள். நான்கு ஆண்டுகள் தொடர்ந்து மகமது மேற்கொண்ட தீவிரத்தின் பயனாக நாற்பது பேர்களே அவருடைய மார்க்கத்தில் வந்து சேர்ந்தார்கள்.

அதற்குப் பிறகுதான் மகமதுவிற்கு ஏற்பட்ட சோதனைகள் கடுமையாயின. அவருடைய மார்க்கத்தை தழுவியவர்கள் முஸ்லீம்கள் என்று அழைக்கப்பட்டார்கள்; கொடுமைகள் அதிகமாகவே மகமதுவுடைய ஆதரவாளர்கள் தங்களுக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள அபிசினியாவிற்குச் சென்றுர்கள். அடுத்த ஆண்டு வேறு சில முஸ்லீம்களும் மக்காவிலிருந்து வெளியேறி அபிசீனியாவிற்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இத்தனை கொடுமைகளுக்கும் மத்தியில் மகமது மட்டிலும் மக்காவிலேயே தங்கி இருந்தார். குரேஷி இனத்தவர் மகமதுவைச் சொல்லொணுத கொடுமைகளுக்கு ஆளாக்கினுர்கள். அபூதலீப் மகமதுவைக் கைவிட்டு விடவேண்டுமென அவர்கள் நிர்ப்பந்தித்தார்கள். ஆனுல், அபூதலீப் அதற்கு இடங்கொடுக்காமல் மகமதுவிற்குத் தேவையான பாதுகாப்பினை அளித்து வந்தார். குரேஷிய இனத்தவர்கள் மகமதுவும் அவரது குடும்பத்தினருமான ஹஷிமைட்டுகளைச் சட்ட விரோதிகள் எனப் பிரகடனப்படுத்தினுர்கள். இந்தத்தடை அமலிலிருந்த இரண்டு மூன்று ஆண்டுகள் மகமதுவும் அவருடைய உறவினர்களும் சமூகப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களாகப் பலவிதமான கொடுமைகளை அனுபவித்தார்கள். கி. பி. 219-ல் அந்தத் தடை நீங்கியது. அந்த ஆண்டுதான் மகமதுவின் மனைவி கதிஜாவும் காலமானுர். அடுத்த ஆண்டே மகமதுவின் பாதுகாப்பாளராக விளங்கிய அபூதலீப்பும் மரணம் அடைந்தார்.

3

அதற்குப் பிறகு மக்காவில் மகமதுவின் நிலை மிகவும் நெருக்கடிக்குள்ளாயிற்று. மகமதுவின் சீடர்களோ மிகச்சிலராக இருந்தார்கள். அவருடைய எதிரிகளோ மிகப்பலராகப் பலம் பெற்று விளங்கினார்கள். ஆதரவாளர்களில் பலரும் அபிசீனியாவில் இருந்தார்கள். மக்காவில் பெருங் கஷ்டங்களுக்கு உள்ளான மகமது, மக்காவுக்கு அறுபது எழுபது மைல் கிழக்கே உள்ள தாயீஃப் என்கிற நகருக்குச் சென்று, அங்கே வசிக்க எண்ணினார். அங்கே இன்னும் மோசமான அவமானங்களை அவர் தாங்கிக்கொள்ள வேண்டி இருந்தது. கல்லடி பட்டார். அவர் சொல்லடிகளுக்கும் ஆளானார். இரண்டு கால்களிலும் ரத்தம் பெருக்கெடுக்க அந்த நகரத்திலிருந்தும் அவர் ஓட வேண்டி இருந்தது. அதனால் எல்லாம் தீர்க்கதரிசி மகமது மனந்தளரவில்லை. இஸ்லாமிய நெறியைப் போதித்துக்கொண்டே இருந்தார். மதினாவிலிருந்து வந்த சில யாத்ரீகர்கள் அவருடைய உபதேசங்களைக் கேட்டு மனமாற்றம் அடைந்தார்கள். அவர்கள் கி. பி. 621-ல், மகமதுவின் முன்னால், ''நாங்கள் ஒரே கடவுளையே தொழுவோம். திருட மாட்டோம். விபச்சாரம் செய்ய மாட்டோம். எங்கள் குழந்தைகளைக் கொல்ல மாட்டோம். மற்றவர்கள் மீது பொய்க்குற்றம் சுமத்த மாட்டோம். நியாயமான எதிலும் தீர்க்கதரிசிக்குக் கீழ்ப்படியாமல் இருக்க மாட்டோம்'' என்கிற பிரதிக்ஞையை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

இந்த பிரதிக்ஞை ''அக்காபா பிரதிக்ஞை'' என்று அழைக்கப்படுகிறது. அடுத்த ஆண்டு மதீனுவிலிருந்த 73 ஆண்களும் 2 பெண்களும் இந்த பிரதிக்ஞையை எடுத்துக்கொண்டார்கள். மக்காவிலிருந்த முஸ்லீம்கள் சிறுசிறு கோஷ்டி களாக அந்த நகரத்தின் கொடுமைகளிலிருந்து விடு பட்டுப் பாதுகாப்பான மதீனுவிற்குப்போய்ச் சேர்ந் தார்கள். மகமது மட்டும் அபூபக்கர், அலி என்கிற இரண்டு தோழர்களுடன் மக்காவிலேயே தங்கி இருந்தார்.

மகமதுவைத் தீர்த்துக் கட்டிவிடுவது என்று குரேஷி இனத்தவர் முடிவு செய்தார்கள். மகமது வீட்டை விட்டு வெளியே வந்தால் அவரைக் கொன்றுவிடலாம் என்கிற நோக்கத்தோடு, அவர் கள் ஆயுதங்களுடன், அவருடைய வீட்டுக்கு வெளியே காத்திருந்தார்கள். இந்தச் சதிஆலோசனை மகமதுவிற்கு முன் கூட்டியே தெரிந்து போனதால், இரவோடிரவாக அபூபக்கருடன் வெளியேறி, மக்கா விற்கு மூன்று மைலுக்கு அப்பால் உள்ள தார் என்னும் குகையில் போய் மறைந்துகொண்டார். தங்கள் முயற்சியில் தோற்றுப்போன குரேஷிகள் மக்கா நகரெங்கும் அவரைத் தேடி அலுத்துப் போனார்கள். அதிலிருந்து மூன்றும் நாள் இரவு மகமது தாம் தங்கியிருந்த குகையிலிருந்து வெளி யேறி மதீனுவிற்குப் புறப்பட்டுச் சென்றார். இது நடந்தது கி. பி. 622-ம் ஆண்டு ஜூன் மாதம் இருப தாம் நாள். இந்த நிகழ்ச்சி ஹிஜிரா என்றழைக்கப் படுகிறது. இந்தத் தேதியிலிருந்துதான் முஸ்லீம் களின் காலண்டர் ஆரம்பமாகிறது.

அதிலிருந்து மதீனு, இஸ்லாம்களின் நகரமாயிற்று. மகமது அந்த நகரில் வரவேற்கப்பட்டார். முஸ்லீம்கள் மதீனுவில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டார்கள். உற்சாகப்பெருக்கிற்கிடையே மதீனு நகரில் மசூதி ஒன்று கட்டப்பட்டது. இஸ்லாமிய வரலாற்றில் இதுவே முதல் மசூதி ஆகும். மக்காவிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றியதோடு குரேஷிகள் திருப்தி அடைந்துவிடவில்லை. முஸ்லீம்களை அழித்துவிட வேண்டுமென்று அவர்கள் பிடிவாதமாக இருந்தார்கள். அடுத்த பத்தாண்டுகள் மக்காவிலிருந்த உருவ வழிபாடு செய்பவர்களுக்கும் மதீனுவிலிருந்த முஸ்லீம்களுக்கும் இடையே பெரும் சச்சரவுகளிலும் மோதல்களிலுமே கழிந்தது.

மகமது மக்காவை விட்டுச் சென்ற இரண்டாவது ஆண்டிலேயே குரேஷிகள் 1000 பேர்களைச் சேர்த்துக்கொண்டு, மதீனுவை நோக்கிச் சென்றுர்கள். அவர்கள் வருவதை அறிந்த மதீனு முஸ்லீம்கள் நகரை விட்டுக் கிளம்பி அவர்களைச் சந்தித்துப் போரிடச் சென்றுர்கள். முஸ்லீம்கள் 313 பேர்கள்தான் இருந்தார்கள். பாதன் என்கிற இடத்தில் கடும் சண்டை நடந்தது. இந்த இடம் மதீனுவிலிருந்து 30 மைல் தூரத்திலும் மக்காவிலிருந்து 220 மைல் தொலைவிலும் இருந்தது. இரண்டு அணியின் பலங்களையும் ஒப்பிட்டு நோக்கி மகமது மிகவும் கவலைக்குள்ளானுர். போர் தொடங்குவதற்கு முன்னுல் அபூபக்கருடன் தமது குடிசைக்குச் சென்று, மகமது ஆழ்ந்த பிரார்த்தனையில் ஈடுபட்

டார். அதற்குப் பிறகு சண்டை ஆரம்பமாயிற்று. மக்காவிலிருந்து வந்தவர்கள் படுதோல்வி அடைந்தார்கள். குரேஷி இனத்தின் தலைவர்களில் பலர் போர்களத்திலேயே கொல்லப்பட்டார்கள்.

பாதனில் கிடைத்த வெற்றி முஸ்லீம்களுக்குப் பெரும் உற்சாகம் ஊட்டியது. ஆனால், குரேஷிகளும் விடுவதாக இல்லை. அடுத்த ஆண்டு 3000 பேரைச் சேர்த்துக்கொண்டு, மதீனாவுக்கு 3 மைல் வடக்கே உள்ள அஹுத் என்னும் நகரை நோக்கிப் படையெடுத்து வந்தார்கள். முஸ்லீம்களுக்குத் தலைமை தாங்கி மகமதுவே களத்திற்குச் சென்றார். அவருடைய அணியைவிட எதிரிகளின் அணி மூன்று மடங்கு பெரியதாக இருந்தது. எதிரிகள் கண்ணுக்குத் தெரிந்தவுடன் அப்துல்லா இபின் உபே என்பவர், தமது 300 ஆதரவாளர்களுடன் மகமதுவை விட்டு விலகிச் சென்றார். மகமது 700 பேர்களுடன் களத்தில் இருந்தார். கடும் போர் மூண்டது. யாருக்கு வெற்றி தோல்வி என்பது தெரியாமல் சிறிது காலம் போர் நடந்தது. முஸ்லீம்கள் பெரும் சேதத்துக்குள்ளானார்கள். அதன் விளைவாக அவர்கள் பின்வாங்க நேரிட்டது. குரேஷியர் களைத்துப்போய் இருந்ததால் முஸ்லீம்களைப் பின்தொடர விரும்பவில்லை. அவர்களும் களத்திலிருந்து வாபஸ் ஆனார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு குரேஷிகள் வேறுசில சக இனத்தவர்களையும் தங்களோடு சேர்த்துக்கொண்டு மகமதுமீதும் முஸ்லீம்கள்மீதும்

தாக்குதல் தொடுத்தார்கள். 24,000 போர் வீரர்களோடு மதீனாவை முற்றுகை இட்டார்கள். இருந்தும் மதீனாவின் பாதுகாப்பை உடைத்து அவர்களால் உள்ளே நுழைய முடியவில்லை. அவர்களிடையே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. களைத்துப்போன நிலையிலும் அவர்கள் இருந்தார்கள். அப்போது வீசிய கடும் புயல் ஒன்று அவர்களுடைய கூடாரங்களைச் சாய்த்தது. வேறு வழி இல்லாமல் படைகள் வாபஸ் ஆகும்படி தளபதி உத்தரவிட்டார்.

அதன் பிறகு ஒரு சமரசம் ஏற்பட்டது. மகமது மக்காவிற்கு யாத்திரை போனார். அமைதியான சூழ்நிலையில் இஸ்லாம் புதிய பலம் பெற்று வளர்ந்தது.

4

சில ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் இனச் சண்டைகள் தோன்றின. இப்போது முஸ்லீம்கள் புதிய பலத்தோடு இருந்தார்கள். மகமது தமது ஆதரவாளர்களுடன் மக்காவின்மீது படையெடுத்து ரத்தம் சிந்தாமலேயே வெற்றி பெற்றார். மக்கா நகரம் எதிர்ப்பில்லாமல் சரணாகதி அடைந்தது.

இதுவே இஸ்லாமிற்கு கிடைத்த இறுதி வெற்றி ஆகும். காபாவிலிருந்த உருவங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. உண்மையான ஒரே கடவுளைத் தொழும் உணர்ச்சி, பிரிந்து கிடந்த அராபிய இனங்களை ஒற்றுமைப்படுத்தியது.

ஹிஜ்ரா நடைபெற்று 10 ஆண்டுகளுக்குப் பிறகு சிலை வழிபாடு முற்றிலும் மறைந்த பிறகு, மகமது புனித யாத்திரிகரின் உடையில் மக்காவிற்குத் தமது கடைசிப் பயணத்தைத் தொடங்கினர். மக்காவிலிருந்து புனித மருதியின்மீது அல்லாவின் ஆசிர்வாதம் கிடைக்கப் பிரார்த்தனை செய்தார். அங்கே புரியவேண்டிய மதச்சடங்குகளை எல்லாம் புரிந்த பிறகு ஊர்வலமாக மினு நகரத்திற்குச் சென்றார். அங்கிருந்து அராஃபத் நகருக்குப் போய்த் தமது பிரார்த்தனையைக் கீழ்க்கண்ட குரான்வாசகத்தோடு முடித்தார்.

''இந்தத் தினத்தில் உனக்காக உனது புனித மதத்தைச் செம்மைப்படுத்தும் பணியை முடித்துவிட்டேன். இஸ்லாமே உனது மதம் என்பதை ஸ்தாபித்துவிட்டேன்.''

கி. பி. 632-ல் தமது தீர்க்க தரிசனப் பணியை முடித்துவிட்டபிறகு, தமது பரம விரோதிகளையும் மன்னித்து அனைவருடைய அன்பையும் மரியாதையினையும் பெற்ற பிறகு, மகமது தமது இளம் மனைவி ஆயிஷா அருகிலிருக்க மக்காவில் காலமானர்.

மாபெரும் அராபிய தீர்க்கதரிசியான மகமது புதிய மார்க்கம் ஒன்றைக் காண்பதில் மாபெரும் வெற்றி பெற்று சரித்திரத்தின் ஒரு அங்கமானர்.

உருவ வழிபாட்டை ஒழித்தார். பல தார மணத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார். விபச்சாரம், வட்டி வாங்குதல், சூதாடுதல், மது

அருந்துதல் போன்றவைகளைக் கடுமையாகக் கண்டித்தார். மக்களிடையே சகோதர பாவத்தை வளர்த்தார். இன வகுப்பு பேதமின்றிக் கடவுளின் முன்னிலையில் அனைவரும் சமம் என்பதனை நிலை நாட்டினார்.

இஸ்லாமின் புனித நூலான குரான் 1300 ஆண்டுகளுக்கு மேலாக மனித இனத்திடம் மகத்தான சக்தி பெற்று விளங்கி வருவதே மகமதுவின் சாதனைக்குச் சரியான சான்றாகும்.

காரல் மார்க்ஸ்

(கி. பி 1818—1883)

1851-ம் ஆண்டு பிரிட்டிஷ் மியூஸியம் நூல் நிலையத்தில் ஒருவர் உட்கார்ந்து, தலைகூட நிமிராமல் புத்தகங்களைப் படித்துக் குறிப்புகளை எழுதிக்கொண்டிருக்கிறார். ஒரு நாள் அல்ல, பல நாட்கள் இந்தப் பணி தொடர்கிறது. அந்த மனிதருடைய தோற்றமே யாருடைய கவனத்தையும் கவரக்கூடிய தோற்றம். பரந்த முகம்; உயர்ந்த நெற்றி: புதர் போல் அடர்ந்த தாடி. ஒழுங்காக வாரிவிடப்படாத அடர்த்தியான தலைமுடி. அவர் உட்கார்ந்திருந்து படிக்கும் போதும் எழுதும் போதும் அவருடைய முகம் ஆழ்ந்த சிந்தனையுடன் காட்சி தருகிறது. பகல் பூராவும் நூல் நிலையத்தில் அமர்ந்து படித்துக் குறிப்புகள் எழுதிக்கொண்டு மாலை ஆனவுடன் சோஹோவிலுள்ள டீன் தெருவிற்கு நடந்து செல்லுகிறார். அங்கே ஒரு கட்டடத்தின் படிக்கட்டுகளில் ஏறி, 28-ம் என்னுள்ள அறையினை அடைகிறார். அந்த அறைதான் அவருடைய வீடு. அங்கே போனவுடனே முற்றிலும் புதிய மனிதராக அவர் மாற்றம் அடைகிறார். அவருடைய மனைவியும் ஆறு குழந்தைகளும் அவரை அன்புடன் வரவேற்கிறார்கள். குழந்தைகள் ஒருவரை ஒருவர் கேலிப் பெயர் சொல்லி அழைத்துக்கொள்ளுகிறார்கள். நூல் நிலையத்தில் தத்துவச் சிந்தனைகளில் மூழ்கி இருந்த அவர்,

இப்போது அவற்றிலிருந்து விடுபட்டுத் தந்தையின் பரிவோடும் பாசத்தோடும் குழந்தைகளிடம் அளவளாவி மகிழ்கிருர். வீட்டில் உண்ணுவதற்கு உணவில்லே. எதையாவது வட்டிக் கடையில் அடமானம் வைத்துப் பணம் வாங்கி வந்தால்தான் அந்த இரவு பசியில்லாமல் கழியும். அடமானம் வைப்பதற்குக் கூட வீட்டில் இப்போது எந்தப் பொருளும் இல்லே. யாரிடமாவது கடன் கேட்டுவரப் புறப்படுகிருர் அந்தச் சிந்தனேயாளர். இந்தத் துயரங்களுக்கு மத்தியிலும் அவர் குழந்தைகளுடன் சிரித்துப் பேசி மகிழ்கிருர். மனேவியிடம் செஸ் விளேயாடுகிருர். இரவு படுக்கைக்குச் செல்லுகிருர். மறுநாள் காலே மியூசியம் நூல் நிலேயத்தை நோக்கி அவருடைய கால்கள் நடை போடுகின்றன.

யார் அந்த விந்தை மனிதர்? பாட்டாளி வர்க்கத்தின் துயர் துடைக்கும் மகத்தான கம்யூனிஸ சித்தாந்தத்தை உலகத்திற்குக் கொடுத்துப் பொருளாதாரச் சிந்தனேயில் மிகப்பெரிய புரட்சி ஏற்படுத்திய காரல் மார்க்ஸ்தான் அவர்.

2

காரல் மார்க்ஸ் 1818-ம் ஆண்டு மே மாதம் 5-ம் நாள் யூத வழக்கறிஞர் ஒருவருக்கு மகனுகப் பிறந்தார். காரல் மார்க்ஸுக்கு 6 வயதாக இருந்த போது அவருடைய குடும்பம் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிற்று. இனம், மதம் ஆகியவற்றின் செல்வாக்

கால் காரல் மார்க்ஸ் அதிகமாகப் பாதிக்கப்பட வில்லை. இளமையிலேயே சுதந்திர உணர்வு மிக்கவ ராகஇருந்தார். புரட்சிப்போக்குஅவரிடம் இயற்கை யாகவே காணப்பட்டது. உணர்ச்சி வசப்படாமல் எதையும் ஆராயும் சக்தியைச் சிறு வயதிலிருந்தே அவர் பெற்றிருந்தார். இந்தக் குணங்கள்தாம் பிற் காலத்தில் அவரைப் பெரியதொரு சக்தியாகவும் மனித சிந்தனையை மாற்றிடும் வல்லமை படைத்த பேரறிஞராகவும் ஆக்கின.

17-வது வயதில் பான் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயிலும் மாணவர் ஆனார் மார்க்ஸ். அடுத்த ஆண்டு பெர்லின் பல்கலைக்கழகத்தில் போய்ச் சேர்ந்தார். இரண்டிற்கும் இடையிலிருந்த கோடை காலத்தில், ஜென்னி என்கிற பெண்ணின்மீது காதல் கொண்டார். அவளோ பெரிய சீமான் ஒரு வரின் மகள். மார்க்ஸோ சாதாரண வக்கீல் ஒரு வரின் மைந்தர். இருந்தாலும் மார்க்ஸ் துணிச்ச லாகத் தமது காதலை அங்கிகரிக்குமாறு கேட்டு ஜென்னியின் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினார்.

இந்தக் காதல் காரல் மார்க்ஸை ஒரு கவிஞ ராகவே மாற்றியது. ஜென்னிக்கு ஏராளமான காதல் கவிதைகள் எழுதி அனுப்பினார். 1841-ம் ஆண்டு அந்தக் கவிதைகள் பெர்லினில் புத்தக வடிவில் வெளியாயின. மாபெரும் அரசியல் பொரு ளாதாரச் சிந்தனையாளரான மார்க்ஸ், முதலில் ஒரு நூலாசிரியராக அறிமுகமானது, தமது கவிதை களின் மூலமாகத்தான்.

1841-ம் ஆண்டு ஜீனு பல்கலைக் கழகத்தில் தத்துவ சாஸ்திரத்தில், டாக்டர் பட்டம் பெற்ருர் மார்க்ஸ். அதன் பிறகு ஹிக்லியன் தத்துவத்தில் வல்லுநரான புருனே பேயரின் நட்பு மார்க்ஸுக்குக் கிடைத்தது. பைபிளைக் கடுமையாக விமர்சிக்கும் குழுவில் மார்க்ஸ் அங்கம் பெற்ருர். அப்போதிலிருந்தே மத எதிர்ப்பில் இவர் தீவிரமான அக்கறை காட்டினுர். அப்போது பான் நகரத்தில் ஹ்கிலியன் கொள்கை உடையவர்கள் பத்திரிகைகள் நடத்தினுர்கள். அதற்கு மார்க்ஸ் ஏராளமான கட்டுரைகள் எழுதினுர். அவருடைய கட்டுரைகளிலிருந்த கடுமையான விமர்சனங்கள் அனைவருடைய கவனத்தையும் கவர்ந்தன. சில மாதங்களிலேயே அந்தப் பத்திரிகைக்கு ஆசிரியரும் ஆனுர். பிரஷ்ய சர்க்காரையும் தம்முடைய பழைய நண்பர்களான புருனே போன்றவர்களையும் இப்போது கடுமையாகத் தாக்கத் தொடங்கினுர். அவருடைய தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் மற்றவர்கள் திணறினுர்கள். அந்தப் பத்திரிகையில் அவருடைய ஆசிரியர் பதவி எவ்வளவு புகழுக்கு உரியதாக இருந்ததோ அவ்வளவு சீக்கிரமே அது முடிவுக்கும் வந்தது. ஏனெனில், தணிக்கையாளர்கள் அந்தப் பத்திரிகையினை வெளியிடுவதையே தடுத்து நிறுத்தினுர்கள்.

வேருெரு பத்திரிகையினை, பிரஷ்ய அரசாங்கத்தின் தணிக்கை தீண்டமுடியாத இடத்திலிருந்து தொடங்குவது என்று ஏற்பாடாயிற்று. அதற்கான இடமாக பாரிஸ் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த இடைக்காலத்தில், தாம் காதலித்த

பெண்ணுன ஜென்னியை மார்க்ஸ் திருமணம் செய்துகொண்டார். புதிய இளம் தம்பதிகளின் மணவாழ்க்கை காரல் மார்க்ஸின் பணிகளுக்கு இடையூருக இருக்கவில்லே.

புதிய பத்திரிகையினை பாரிஸில் ஆரம்பிக்க முடியவில்லே. அதனுல் பாரிஸிலிருந்து வெளியான வேருெரு தீவிரமான ஜெர்மானிய பத்திரிகையில் மார்க்ஸ் கட்டுரைகள் எழுதத் தொடங்கினுர். அவருடைய தாக்குதல் முன்னிலும் வேகம் நிறைந்ததாக இருந்தது. அதைப் பொறுக்க முடியாத பிரஷ்ய சர்க்கார் காரல் மார்க்ஸை பிரான்ஸை விட்டு வெளியேற்றும்படி பிரஞ்சு சர்க்காரைக் கேட்டுக் கொண்டது. 1845, ஜனவரியில், காரல் மார்க்ஸ் பாரிஸை விட்டு வெளியேறி, பிரஸ்ஸல்ஸ் போய்ச் சேர்ந்தார்.

பாரிஸிலிருந்தபோது அவருடைய வாழ்க்கையில் முக்கியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ஃபிரெடரிக் எங்கல்ஸ் என்பவரின் நட்பு அவருக்குக் கிடைத்தது. எங்கல்ஸ் மார்க்ஸைவிட இரண்டு வயது சிறியவர். ஜெர்மன் பருத்தி உற்பத்தியாளர் ஒருவரின் மகன். இளமையிலிருந்தே புரட்சிகரமான எண்ணங்கள் கொண்டிருந்தவர். மான்செஸ்டரிலிருந்த தமது தந்தையின் அலுவலகக் கிளேயில் சிறிது காலத்தை எங்கல்ஸ் கழித்தார். அப்போது இங்கிலாந்தில் ராபர்ட் ஓவன் முதலான சார்ட்டிஸ்ட் தலேவர்களின் பழக்கம் அவருக்கு ஏற்பட்டது. மார்க்ஸை முன்பே அவர் சந்தித்திருந்தாலும் பாரிஸுக்கு மார்க்ஸ் வந்த பிறகுதான் மார்க்ஸோடு

அவருக்கு நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. புருேஞே பேயருக்கு எதிராக இரண்டு பேரும் சேர்ந்து ஒரு துண்டுப் பிரசுரம் எழுதி வெளியிட்டார்கள். அப்போது ஏற்பட்ட இந்த இணைப்பு ஆயுட்காலம் முழுவதும் நீடித்தது. காரல் மார்க்ஸின் உற்ற நண்பரான எங்கல்ஸ், தோழராக, உதவியாளராக, விளம்பரப்படுத்துகின்றவராக, சொல்லுகின்றவற்றை எழுதுகின்றவராக, எல்லாவ்ற்றிற்கும் மேலாக காரல் மார்க்ஸுக்குப் பொருளுதவி செய்து ஆதரவு அளிப்பவராக விளங்கினர்.

1845-ம் ஆண்டு வஸந்த காலத்தில் பிரஸ்ஸல்ஸில் இருந்த மார்க்ஸோடு எங்கல்ஸும் போய்ச் சேர்ந்துகொண்டார். அந்த ஆண்டு கோடைக் காலத்தில் மார்க்ஸை இங்கிலாந்திற்கு அழைத்துச் சென்றார் எங்கல்ஸ். இங்கிலாந்திலிருந்த ஜெர்மன் தொழிலாளர்களின் கல்விக் கழக நிறுவனர்களை மார்க்ஸுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் எங்கல்ஸ். பிரஸ்ஸல்ஸுக்குத் திரும்பி வந்த மார்க்ஸ் அதே அடிப்படையில் ஜெர்மன் தொழிலாளிகள் கழகம் ஒன்றை அங்கே நிறுவினர். அந்தக் கழகத்தின் நோக்கம் கம்யூனிஸ சித்தாந்தத்தைக் கற்றுணர்ந்து மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவதுதான். அதிலிருந்தே ''கம்யூனிஸ்ட் கடிதத் தொடர்புக் குழுவை'' அமைத்துப் பல்வேறு நாடுகளில் கம்யூனிஸ சிந்தனையாளர்களோடு தொடர்பினை மார்க்ஸ் ஏற்படுத்திக்கொண்டார். எங்கல்ஸும் பாரிஸுக்குச் சென்று. அதே மாதிரி ஒரு கழகத்தை நிறுவினர். 1847-ல் இம்மாதிரி

அமைக்கப்பட்ட குழுக்களின் மாநாடு லண்டனில் நடத்தப்பட்டது. இதன் விளைவாகச் சர்வதேச கம்யூனிஸ்ட் லீக் என்கிற அமைப்பு உருவாயிற்று. அந்த அமைப்பின் சார்பாகத்தான் மார்க்ஸும் எங்கல்ஸும் சரித்திரப் பிரசித்தி பெற்ற கம்யூனிஸ்ட் அறிக்கையை வெளியிட்டார்கள்.

3

கம்யூனிஸ்ட் அறிக்கை தனது முதல் அத்தியாயத்திலேயே மார்க்ஸின் கொள்கைக்கான விளக்கத்தைக் கீழ்க்கண்ட வரிகளோடு ஆரம்பிக்கிறது. ''சமுதாயத்தின் கடந்தகால வரலாறு பூராவும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறே ஆகும்.''

வரலாற்றை லோகாயதக் கண்ணோட்டத்தோடு அந்த அறிக்கை விவரிக்கிறது. முதலாளித்துவத்தின் பொருளாதாரப் பலம் அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் எண்ணிக்கையில் குறைந்து போவார்கள். அப்படிக் குறையக் குறையத் தொழிலாளி வர்க்கத்தை மேலும் மேலும் நசுக்க அவர்கள் முயற்சி செய்வார்கள். அவர்கள் அப்படிச் செய்யும் போது தொழிலாளி வர்க்கம் தங்களுடைய வாழ்க்கையின் பொதுத் தன்மையினை உணர்ந்து, ஒருங்கிணைந்து ஐக்கியமாவார்கள். முதலாளித்துவம் தனது தேவைகளுக்காக மேற்கொள்ளும் காரியங்களை ஒன்றுபட்டு எதிர்ப்பார்கள். இதன் விளைவாக முதலாளித்துவ தேசிய அமைப்புகளை

அவர்கள் தகர்த்தெறிந்து தொழிலாளி வர்க்கத்தின் தேவைகளையும் விழைவுகளையும் பூர்த்தி செய்யும் படியான அமைப்பு ஒன்றினையும் காண்பார்கள். இந்த அமைப்பு சர்வதேசத் தன்மை கொண்டதாக இருக்கும். இப்படித்தான் அந்த அறிக்கை சரித்திரத்தை விமர்சனம் செய்கிறது.

அந்த அறிக்கை கம்யூனிஸ இயக்கத்தின் நோக்கங்களை மறைக்கவில்லை. முதலாளித்துவ சமுதாய அமைப்பை வன்முறைப் புரட்சிகளால் உடைத்தெறியும்படி தொழிலாள வர்க்கத்தை வெளிப்படையாக அந்த அறிக்கை கேட்டுக்கொள்ளுகிறது. அப்படிப்பட்ட புரட்சியால் தொழிலாளர் வர்க்கம் எதையாவது இழக்க வேண்டி இருக்குமென்ருல் அது அவர்களின் விலங்குகளாகத்தான் இருக்குமென்றும் ஆனுல், அதனுல் அவர்கள் பெறும் லாபம் இந்த உலகம் அனைத்துமாகவே இருக்கும் என்றும் அந்த அறிக்கை தெளிவுபடுத்தியது. 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்கிற கோஷத்தை அந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

1848-ல் பெல்ஜியத்தில் புரட்சி வெடித்தது. மார்க்ஸ் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். புரட்சியின் விளைவாக பாரிஸ் நகரக் கதவுகளும் ஜெர்மன் தேசத்துக் கதவுகளும் மார்க்ஸுக்குத் திறந்து விடப்பட்டன ஓராண்டுக்குள்ளேயே புரட்சி ஓய்ந்து போனதால் ஜெர்மனியை விட்டு மார்க்ஸ் ஓடவேண்டியதாயிற்று. பாரிஸும் அவருக்கு

இடம் கொடுக்க மறுத்தது. கடைசியாக லண்டனுக்கு ஓடிப்போய் அங்கேயே அவர் தங்கினுர்.

லண்டனில் அவருடைய குடும்ப வாழ்க்கையில் வறுமைக்கு எதிரான போராட்டமே நிகழ்ந்தது. மார்க்ஸுக்கு அன்பு நிறைந்த மனைவி இருந்தார். ஆதரவு காட்டும் குழந்தைகள் இருந்தார்கள். விசுவாசமுள்ள தாதி இருந்தாள். ஆனுல் வருமானத்திற்கு மட்டும் எந்த விதமான வழியும் இல்லாமல் இருந்தது. வாடகை கொடுக்க முடியாமல் வீடுகளை மாற்றிக்கொண்டே இருந்தார். வறுமையைத் தொடர்ந்து நோயும் பீடித்தது. இரண்டு குழந்தைகள் இறந்து போனுர்கள். உடலில் கட்டிகள் ஏற்பட்டு மார்க்ஸ் பெரும் உபாதைகளுக்கு உள்ளானுர். செல்வத்தில் இளமைக் காலத்தை கழித்த அவருடைய மனைவி ஜென்னியும் வறுமையினுல் வாட்டமுற்ருர்.

இத்தனை வறுமைகளுக்கு மத்தியிலும் மார்க்ஸ் வாழ்க்கை நடத்தத் துணையாக இருந்து, அவருடைய நண்பரான எங்கல்ஸ் அவருக்குத் தாராளமாகப் பண உதவி செய்துகொண்டிருந்தார்.

மார்க்ஸுக்காக எங்கல்ஸ் பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதி அதனுல் கிடைக்கும் வருமானத்தை மார்க்ஸுக்குக் கொடுத்தார். வாழ்நாள் பூராவும் அவர் உழைத்தஉழைப்பின் விளைவாக ''மூலதனம்'' என்கிற அரியநூலை வெளியிட்டார். அதனுடைய முதல் பகுதிதான் மார்க்ஸின் காலத்தில் வெளியாயிற்று. இரண்டாவது மூன்ருவது பகுதிகளை அவர்

இறந்தபிறகு எங்கல்ஸ் வெளியிட்டார். அந்த நூல் பொருளாதார விதிகளைப் புதிய கண்ணோட்டத்தில் கொண்டுவந்து நிறுத்தியது. மனித சிந்தனையிலும் அரசியல் போக்குகளிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. வர்க்கப் போராட்டத்திற்கு வடிவம் கொடுத்து ஊக்கப்படுத்தியது. கம்யூனிஸ சமுதாயம் அமையும் போது அரசாங்கங்களே தேவையில்லாத சூழ்நிலை உருவாகுமென மார்க்ஸ் கணிப்புச் செய்தார். மார்க்ஸின் சிந்தனைகளால் ரஷ்யாவிலும் சீனுவிலும் மாபெரும் புரட்சிகள் ஏற்பட்டுப் புதிய சமூக அமைப்புகள் உருவாயின.

4

மூலதனம் என்கிற நூலை எழுதுகின்றபோது மார்க்ஸ் மிகுந்த சுறுசுறுப்புடன் செயல்பட்டார். 1864-ல் முதல் கம்யூனிஸ அகிலம் உருவாகியது. 1872-ல் சில குழப்பங்களால் அது மறைந்து போயிற்று. இப்போது மார்க்ஸ் வறுமையிலிருந்து விடுபட்டிருந்தார். அவருடைய நண்பரான எங்கல்ஸ் ஆண்டொன்றுக்கு 350 பவுன் உதவியாகத் தமது நிறுவனத்திலிருந்து மார்க்ஸுக்குக் கொடுத்தார். ஆனுல், வறுமையின் விளைவாக நோய்வாய்ப்பட்டிருந்த மார்க்ஸ் தொடர்ந்து வேலை செய்ய முடியாமல் சிரமப்பட்டார்.

1881-ல் அவருடைய மனைவி புற்றுநோயால் காலமானுர். மார்க்ஸும் ப்ளூரசியால் தாக்கப்பட்டு

பலமிழந்து போனுர். அடுத்த இரண்டு ஆண்டுகள், அதாவது 1883-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் நாள் லண்டனில் அவர் காலமானுர். அவருடைய கல்லறையில் உரையாற்றிய எங்கல்ஸ், அவருடைய பெயரும் பணிகளும் எத்தனை நூற்றுண்டுகளானுலும் வாழ்ந்திருக்கும் என்று குறிப்பிட்டார்.

மனித வரலாற்றில் மார்க்ஸ ஒரு சகாப்தத்தின் ஆரம்பம். அந்த சகாப்தத்தின் முடிவு? அதைக் கண்டறியத்தான் உலகத்தின் பெரிய சரித்திர ஆசிரியர்களும் அரசியல்வாதிகளும் இன்றைக்கும் முயன்றுகொண்டிருக்கிறுர்கள்.

மகாத்மா காந்தி

(கி. பி. 1869—1948)

சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு மாபெரும் அற்புதத்தை நிகழ்த்தியவர் காந்தி. ஆயுதமின்றி ஆதிக்க வெறியர்களை எதிர்த்துப் போராடி, ஆன்மிக பலத்தின் மூலமாகவே ஒரு மாபெரும் சமுதாயத்துக்கு விடுதலை பெற்றுத் தந்த அதிசயத்தை அவர் நிகழ்த்தியபோது, உலகமே அந்தச் சாதனை கண்டு பிரமித்துப் போயிற்று.

காந்தி, கத்தியவார் மாகாணத்தில், பனியா வகுப்பில் பிறந்தார். அவருடைய தந்தையாரான காபா காந்தி, ராஜ்கோட் சமஸ்தானத்திலும் வாங்கநேர் சமஸ்தானத்திலும் திவானாக இருந்தார். அவருடைய நான்காவது மனைவிக்குக் கடைசிக் குழந்தையாகப் பிறந்தவர்தான் மோகனதாஸ் கரம் சந்த் காந்தி.

மதச்சம்பிரதாயங்களில் ஊறிப்போன வைதிகச் சூழ்நிலையில் அவர் வளர்ந்தார். மத அனுஷ்டானங்களை மிகவும் பயபக்தியுடன் கடைப்பிடித்து வந்தவர் அவருடைய தாயார். அவர் சுறுசுறுப்பானவர். நிறைந்த விஷய ஞானம் உடையவர் அவருடைய தந்தையார். அதிகம் படித்தவராக இல்லாதிருந்தாலும் நிறைந்த உலக ஞானம் உடையவராக விளங்கினார்.

1869-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் நாள் போர்பந்தரில் காந்தி பிறந்தார். 7 வயது வரையில்

அங்கே வாழ்ந்தார். பள்ளிக்கூடத்துக்குப் போனுர். ஆனுல், படிப்பில் அவ்வளவு கெட்டிக்காரராக இருக்கவில்லை. காந்தியின் குடும்பம் போர் பந்தரிலிருந்து ராஜ்கோட்டிற்குச் சென்றது. அங்கே அவருடைய தந்தை காபா காந்தி சமஸ் தானத்தில் உத்தியோகம் ஏற்றுக்கொண்டார்.

13-வயதில் காந்திக்கு திருமணம் ஆயிற்று. ஓராண்டு இடைவெளிக்குப் பிறகு உயர்நிலைப் பள்ளியில் தமது படிப்பைக் காந்தி மீண்டும் தொடங்கினுர். மிகுந்த சிரமப்பட்டு சமஸ் கிருதத்தை கற்றுக்கொண்டார். ஹிந்து வேத நூல்கள் பயில அது அவருக்கு உதவியாக இருந்தது.

இந்தச் சமயத்தில் காந்தியின் தந்தை நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானுர். காந்தி அவர் அருகில் இருந்து அவருக்கு வேண்டிய பணி விடைகள் எல்லாம் செய்தார். தந்தையின் மரணம் அவருக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

காந்தி மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறி னுர். பவநகரிலுள்ள சாமல்தாஸ் கல்லூரியில் சேர்ந்து சிறிது காலம் பயின்ருர். அங்கிருந்த வாழ்க்கை அவருக்குப் பிடிக்காததால் ஊருக்குத் திரும்பினுர். அவர்கள் குடும்ப நண்பர் ஒருவர் சட்டப் படிப்புக்குக் காந்தியை இங்கிலாந்திற்கு அனுப்பலாமென யோசனை கூறினுர். மிகுந்த வாதப்பிரதிவாதங்களுக்குப் பிறகு சட்டப் படிப் புக்கு அவரை லண்டனுக்கு அனுப்புவது என்று அவருடைய குடும்பத்தினர் தீர்மானம் செய்தார்

கள். மத ஆசாரங்களில் மூழ்கிப்போயிருந்த பனியா ஜாதியிடம் இது பல வகையான அவதூறு களைக் கிளப்பியது. ஜாதித் தலைவர்கள் ஒன்று கூடி அவரைப் பிரஷ்டம் செய்தார்கள். இத்தகைய எதிர்ப்புகளுக்கு இடையிலேயும், 1887-ம் ஆண்டு செப்டம்பர் மாதம், பம்பாயிலிருந்து காந்தி லண்டனுக்குப் பயணமானார்.

லண்டனில் திருமதி பெசன்ட் போன்ற பிரம்ம ஞானத் தலைவர்களைச் சந்தித்தார். அவர்களின் தொடர்பால் இந்து மத சாஸ்திரங்களின்மீது அவருக்கு விசேஷமான அக்கறை ஏற்பட்டது. இது வரையில் அதிகமான கவனம் செலுத்தாத கிறிஸ் துவ மதத்தினிடத்திலும் கவனம் செலுத்தத் தொடங்கினார். இயேசுபிரானின் மலைச்சொற் பொழிவு அவருடைய மனதை மிகவும் கவர்ந்தது. தீமை செய்வோருக்கும் நன்மையே திருப்பிச் செய்ய வேண்டும் என்கிற இயேசு பிரானின் போதனையை ஹிந்து மத நூல்களில் காணப்படும் அதே கருத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்.

4 ஆண்டுகள் லண்டனில் தங்கி, தமது கல்வி யினை முடித்துக்கொண்டார். வழக்கறிஞர் பட்டம் பெற்று இந்தியாவிற்குத் திரும்பினார். ராஜ்கோட் டில் தொழிலை ஆரம்பித்தார். அதில் அவர் வெற்றி அடையவில்லை. தென்னாப்பிரிக்காவிலிருந்த இந்திய நிறுவனம் ஒன்று, தனது வழக்கில் உதவி செய் வதற்காகக் காந்தியைத் தென்னாப்பிரிக்காவிற்கு அழைத்தது. 1893-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தென்னாப்பிரிக்காவிற்குப் பயணமானார். நேட்டா

லுக்குப் போய்ச் சேர்ந்தவுடனே அங்கே அவருக் கேற்பட்ட அவமானங்கள் அரசியல் விழிப்புணர்ச் சியை அவரிடத்தில் உண்டாக்கின. கத்திய வாரில், ஆங்கில அதிகாரி ஒருவர் இன வேற்றுமை உணர்வால் தம்மைக் கேவலமாக நடத்திய அனுபவம் அவருக்கு இந்தியாவிலேயே ஏற்பட் டிருந்தது. ஆனால், நேட்டாலில் இந்தியர்கள் எல்லா இடங்களிலும் மிகவும் கேவலமான முறை யில் அவமானப்படுத்தப்படுவதை பார்த்து மிகவும் வருந்தினர்.

2

தென்னாப்பிரிக்காவில் வந்திறங்கிய தினத் தன்றே டர்பனிலிருந்த மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்கொன்றுக்காக ஆஜரானர். காந்தி தலையில் தலைப்பாகை அணிந்திருந்தார். மாஜிஸ்ட்ரேட் சிறிது நேரம் அவரை உற்றுப் பார்த்துக்கொண் டிருந்துவிட்டுத் தலைப்பாகையை எடுக்கும்படி உத்தரவிட்டார். தலைப்பாகையை எடுப்பதைவிட கோர்ட்டில் இருந்து வெளியேறிவிடுவதே மேலானது எனக் கருதிய காந்தி, அங்கிருந்து வெளியேறினர். சில தினங்கள் கழித்து பிரிட் டோரியாவிற்கு ரயிலில் புறப்பட்டார். அவரிடம் பிரயாணம் செய்வதற்கான முதல் வகுப்பு டிக்கட் இருந்தும் அவர் கருப்பு இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. பலவந்தமாக வெளியே பிடித்துத் தள்ளப்பட்டார். அந்தப் பிரயாணத்தில் ஒரு பகுதியைக் கோச்சு

வண்டியின் மூலம் செல்ல வேண்டி இருந்தது. அங்கும் அவர் வண்டிக்குள் உட்கார அனுமதிக்கப்படாமல் வண்டி ஓட்டுபவனின் அருகிலேயே உட்கார வைக்கப்பட்டார். அந்த வண்டியின் கண்டக்டர் அவரைத் தாறுமாறுகப் பேசி அடிக்கவும் செய்தார். ரயில்வே அதிகாரிகள் அவரை ஒரு கூலி என்று அழைத்து அவமானப்படுத்தினர்.

காந்தி நடத்துவதற்கான வழக்கு பிரிட்டோரியாவில் பல மாதங்கள் நீடித்தது. யாருக்காக காந்தி வழக்காடப்போனுரோ அவர்கள் முஸ்லீம்கள். அவர்களுடைய பழக்கத்தால் காந்தி இஸ்லாமிய மதத்திலும் அக்கறை காட்டத் தொடங்கினுர். குரானின் மொழிபெயர்ப்பை ஆர்வமாகப் படித்தார். பிரிட்டோரியாவிலிருந்த சிலர் அவரைக் கிருஸ்துவ மதத்திற்கு மாற்ற முயன்ருர்கள். காந்தியின் பெருமுயற்சியால் அவர் மேற்கொண்ட வழக்கு கோர்ட்டுக்கு வெளியிலேயே சமரசமான உடன்பாட்டிற்கு வந்தது.

தாயகம் திரும்புவதற்காக காந்தி டர்பனுக்கு வந்து சேர்ந்தார். பிரிட்டோரியாவிலிருந்தபோது தென்னுப்பிரிக்காவில் இந்திய சமூகத்தினருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி நன்ருக அறிந்துவைத்திருந்ததோடு அந்த விஷயம் குறித்துப் பல கூட்டங்களிலும் உரையாற்றினுர். டர்பனில் அவருக்கு ஒரு பிரிவு உபசாரக்கூட்டம் நடத்தப்பட்டது, நேடாலிலிருந்து வெளியாகும் செய்தித்தாள் ஒன்றினை அவரிடம் கொடுத்தார்கள். நேடால் சர்க்கார் இந்திய மக்களுக்கிருந்த வாக்

குரிமையினேப் பறிக்க முடிவு செய்திருப்பதாக பத்திரிகையில் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது. நண்பர்களின் வற்புறுத்தலால் நேடால் சர்க்காரின் முயற்சிகளை எதிர்த்துப் போராட தென்னுப்பிரிக்காவிலேயே தற்காலிகமாகத் தங்கு வது என்று காந்தி முடிவிற்கு வந்தார்.

அன்று இரவே விண்ணப்ப மனு ஒன்றை அவர் தயாரித்தார். நேடால் சட்ட மன்றத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டது. தென்னுப்பிரிக்காவில் இப்படியொரு முயற்சியை இந்தியர்கள் மேற் கொண்டது அதுவே முதல் தடவை ஆகும். இது அங்கு வாழ்ந்த இந்திய மக்களிடையே பெரும் உற்சாகத்தினே ஏற்படுத்தியது. 10,000 கையெழுத்துகளுடன் அப்போது காலனி மந்திரி யாக இருந்த ரிப்பன் பிரபுவிற்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டது.

காந்தி இந்தியாவிற்குத் திரும்ப விரும்பினுர். ஆனுல், தென்னுப்பிரிக்காவிலிருந்த நண்பர்கள், அவர், அங்கேயே தங்கி அங்கிருந்த இந்தியர் களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவரும் சம்மதித்தார். அவர்கள் கொடுத்த சம்பளத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். அங்கேயிருந்த இந்திய நிறுவனங்களில் சட்ட ஆலோசகராக இருந்து அந்த ஊதியத்தினுல் வாழ்க்கை நடத்துவது என்று ஏற்பாடாயிற்று.

இந்திய மக்களே ஸ்தாபன ரீதியாக ஒழுங்கு படுத்துவதில் காந்தி ஈடுபட்டார். 1894-ம் ஆண்டு நேடால் இந்தியன் காங்கிரஸ் என்கிற அமைப்பை அவர் நிறுவினுர். இந்திய மக்கள் சுகாதார, கல்வி

வீட்டு வசதிகளோடு வாழப் பெருமுயற்சிகளை மேற்கொண்டார். 1896-ம் ஆண்டு 6மாத விடுமுறையில் இந்தியாவிற்கு வந்தார். நேடாலிலுள்ள இந்தியர்களின் நிலைமையினை விளக்கி இந்தியாவின் பல நகரங்களில் சொற்பொழிவாற்றினார். அவர்கள் நிலைமை குறித்து அவர் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் பலராலும் ஆர்வத்தோடு படிக்கப்பட்டது.

காந்தியின் இந்த நடவடிக்கைகள் பற்றி பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிந்த நேடாலில் வாழ்ந்த ஐரோப்பியர்கள், அவர்மீது கடுங்கோபம் கொண்டார்கள். மறுபடியும் காந்தியும் அவருடைய குடும்பத்தினரும் நேடாலில் வந்து இறங்குவதைத் தடுத்துவிடுவது என்று முடிவு செய்தார்கள். காந்தியும் அவருடன் வந்த 800 இந்தியப் பிரயாணிகளும் நேடாலில் இறங்க முடியாமல் அவர்களைச் சுமந்து வந்த கப்பல், துறைமுகத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டது. 23-நாட்கள் பிரயாணிகள் இறங்க முடியாமல் கப்பலிலேயே இருந்தார்கள். கப்பலை அந்தப் பிரயாணிகளுடன் இந்தியாவிற்கே திருப்பி அனுப்ப முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கடைசியில் இந்தியப் பிரயாணிகள் நேடாலில் இறங்கினார்கள். வெள்ளையர்கள் காந்தியைக் கடுமையாகத் தாக்கினார்கள். ஒரு வெள்ளைக்காரப் போலீஸ் அதிகாரியின் மனைவி தலையிட்டிருக்காவிட்டால் காந்தி கொலை செய்யப்பட்டிருப்பார். அன்றைய தினம் மாலை காந்தி தங்கியிருந்த வீட்டை வெள்ளைக்காரர்கள் சூழ்ந்துகொண்டு தாக்கினார்கள். போலீஸ் அதிகாரிகள் தந்திரமாக

காந்தியை வெளியேற்றி, அவருடைய உயிரைக் காப்பாற்றினார்கள்.

போயர் யுத்தத்தில் காந்தி வகித்த பங்கு மகத்தானது. அந்த யுத்தத்தில் நேடால் இந்தியர்கள் பிரிட்டிஷாருக்கு உதவி செய்ய விரும்பவில்லை. நேடால் இந்தியர்கள் தங்களை பிரிட்டிஷ் பிரஜைகளாகக் கருதிக்கொண்டு உரிமைகளுக்காகப் போராடுவதால், போயர் யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு அவர்கள் உதவவேண்டுமென காந்தி உபதேசித்தார். காந்தியும் தம்மைப் பொறுத்த வரையில் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாகவே நடந்து கொண்டார். போயர் யுத்தத்தில் காயம்பட்ட ராணுவ வீரர்களுக்கு மருத்துவ உதவி செய்வதில் பெரும் பங்கு வகித்தார் காந்தி. அந்தப் பணியில் அவர் உயிரையும் பொருட்படுத்தாமல் முன்னணியில் இருந்தார்.

போயர் யுத்தம் முடிந்தபிறகு தென்னாப்பிரிக்காவை விட்டுப் பம்பாய்க்கு வந்து அங்கே வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். அது சில மாதங்களே நீடித்தது. தென்னாப்பிரிக்க இந்தியர்கள் தங்களுடைய போராட்டத்திற்குத் தலைமை தாங்க வரும்படி காந்தியை மீண்டும் அழைத்தார்கள். போயர்களின் தோல்விக்குப் பிறகு, பிரிட்டிஷ் நிர்வாகத்தில் டிரான்ஸ்வாலில் இருந்த இந்தியர்களின் நிலைமை மிகவும் மோசமாயிற்று. நிற பேதம் தலைவிரித்தாடியது. இந்தியர்கள் உரிமையற்று இரண்டாந்தர குடிமக்களாக வாழ்ந்தார்கள். இந்தியர்களின் குறைகளை எடுத்துச் சொல்ல ''இந்தியன் ஒப்பினியன்'' என்கிற பத்திரிகையினை

ஆரம்பித்து காந்தி நடத்தி வந்தார். டர்பனுக்கு அருகிலுள்ள ஃபோனிக்ஸ் நகரில், அவர் ஏற்பாடு செய்த சமூகக் குழுவிலிருந்து அந்தப் பத்திரிகை இப்போது வெளியாயிற்று. டிரான்ஸ்வால் இந்தியர்களின் கேந்திரஸ்தானமான ஜோகன்ஸ்பர்க்கில் வசிக்கத் தொடங்கினர்.

நேடாலில் ஜூலுக் கலகம் நடைபெற்றபோது, காந்தி தமது குடும்பத்தினரை ஃபோனிக்ஸ் நகருக்கு அனுப்பிவிட்டு, பிரிட்டிஷாருக்காக ஆம்புலன்ஸ் குழு ஒன்றிற்குத் தலைமை வகித்தார். காயம் அடைந்த ஜூலுக் கைதிகளைப் பராமரிக்கும் பொறுப்பினைக் காந்தி ஏற்றுக்கொண்டார். இந்தப் பணிக்காக காந்தி பெரும் பாராட்டுதலையும் பெற்றார்.

அந்தச் சமயத்தில், டிரான்ஸ்வால் இந்தியர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர அந்த அரசாங்கம் முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தது. வயது வந்த ஒவ்வோர் இந்தியனும் கைரேகையுடன் தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென அந்தச் சட்டம் சொல்லிற்று.

1906-ம் வருடம் ஜோகன்ஸ்பர்க்கில் இந்தியர்களின் பிரம்மாண்டமான கூட்டம் ஒன்று நடந்தது. அந்தக் கூட்டத்தில் கூடியிருந்த 3000 இந்தியர்கள் அஹிம்சை வழியில் அந்தக் கறுப்புச் சட்டத்தை எதிர்த்துப் போராடுவது எனப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்கள். காந்தியின் முதல் அஹிம்சைப் போர் ஆரம்பமாயிற்று. முதல் சத்தியாக்கிரகப் போர் ஆரம்பமாயிற்று.

இந்தியா மந்திரியைச் சந்திக்கத் தூதுக்குழு ஒன்றினை அழைத்துக்கொண்டு காந்தி இங்கிலாந்திற்குப் போனார். திரும்பி வருகிற வழியில் டிரான்ஸ்வால் அரசின் கறுப்புச் சட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதிக்க மறுத்துவிட்டது என்கிற மகிழ்ச்சிச் செய்தி அவர்களை வந்து அடைந்தது. கேப்டவுனுக்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது, டிரான்ஸ்வாலுக்குப் பிரதிநிதித்துவ சர்க்காரை அங்கீகரித்துவிட்டதாகவும், ஆகவே, எந்தச் சட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ள அவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

கறுப்புச் சட்டம் நிறைவேறியது. அந்தச் சட்டப்படி தங்களைப் பதிவு செய்துகொள்ள பெரும்பாலான இந்தியர்கள் முன்வரவில்லை. காந்தி உட்பட பலர் கைது செய்யப்பட்டார்கள். காந்தியும் சுமட்ஸும் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தார்கள். பெரும்பாலான இந்தியர்கள் தாங்களாகவே முன் வந்து பதிவு செய்துகொண்டால் அந்தச் சட்டத்தை ரத்து செய்துவிடுவதாக சுமட்ஸ் வாக்குறுதி அளித்தார். இந்த ஒப்பந்தம் காந்தியின் ஆதரவாளர்களுக்கே பிடிக்கவில்லை. தாங்கள் காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டதாக அவர்கள் கருதினார்கள். அவரைச் சிலர் நடுத்தெருவில் தாக்கவும் செய்தார்கள்.

ஜெனரல் சுமட்ஸ் தமது வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. போராட்டம் மீண்டும் தொடங்கப்பட்டது. டிரான்ஸ்வாலுக்குள் ஆசியாக்காரர்களையே நுழையவிடாமல் தடுக்கும் சட்டம் ஒன்று

நிறைவேற்றப்பட்டது. தென்னாப்பிரிக்க உயர்நீதி மன்றம் கிறிஸ்துவ முறையில் நடைபெறும் திருமணங்களே சட்டப்படி செல்லுபடி ஆகும் என அளித்த தீர்ப்பு இந்தியர்களுக்குப் பேரிடியாக அமைந்தது. வெறுப்புணர்ச்சி அலையெனப் பொங்கியது. காந்தியின் தலைமையில் இந்தியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார்கள். நேடால் இந்தியர்களுக்காகக் காந்தி நடத்திய போராட்டத்தில் அவரும் அவருடைய ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டார்கள். இந்தப் போராட்டம் நேடால் இந்தியத் தொழிலாளர்களுக்காக காந்தி நடத்திய போராட்டம் ஆகும். தொழிலாளர்கள் சுடப்பட்டும் சாட்டையால் அடிக்கப்பட்டும் வேலைக்குத் திரும்புமாறு செய்யப்பட்டார்கள். இதைப் பார்த்து இந்திய மக்கள் கொதித்தெழுந்தார்கள். வைஸ்ராய் ஹாரிடென் பிரபு தென்னாப்பிரிக்க சர்க்காரின் நடத்தையை வன்மையாகக் கண்டித்தார்.

ஜெனரல் சுமட்ஸ் தமது நிலையிலிருந்து இறங்கி வந்தார். இந்தச் சம்பவங்கள் பற்றி விசாரணை செய்யக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது. காந்தியும் அவருடைய சகாக்களும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்கள். பிரசித்தி பெற்ற காந்தி-சுமட்ஸ் ஒப்பந்தம் உருவாயிற்று. இந்திய நிவாரணச் சட்டம் நிறைவேறியது. இந்தியர்களின் முக்கியமான குறைகளுக்குப் பரிகாரம் காணப்பட்டது. பொது வாழ்க்கைப் போராட்டத்தில் காந்தி பெற்ற முதல் பெரிய வெற்றி இது.

சத்தியாகிரகம் எவ்வளவு பலம் பொருந்திய ஆயுதம் என்பதைக் காந்தி தெரிந்துகொண்டார்.

3

காந்தி இங்கிலாந்திற்குப் பயணமானுர். அவர் இங்கிலாந்து போய்ச் சேருமுன்பே உலக மகா யுத்தம் ஆரம்பமாகிவிட்ட செய்தி கிடைத்தது. இங்கிலாந்து போய்ச் சேர்ந்தவுடன் அங்கிருந்த இந்தியர்களை வைத்து ஆம்புலன்ஸ் குழு ஒன்று அமைக்க ஏற்பாடு செய்தார். கடுமையான புளூரசி நோயால் அவர் பாதிக்கப்படவே, டாக்டர்களின் ஆலோசனையின்படி, இந்தியாவிற்குத் திரும்பினுர்.

இந்திய மக்கள் அவருக்குப் பெரும் வரவேற்பு அளித்தார்கள். அவுரி பயிர் செய்யும் தொழிலாளர்களின்சார்பாக சம்பரானில் போராட்டத்தில் ஈடுபட்டார். அதில் வெற்றியும் பெற்ருர். இந்தப் போராட்டத்தின் போதுதான் இந்தியாவின் கிராம மக்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அவர்களின் வறுமையும் வாழ்க்கைத் தரமும் அவர்களுடைய பிரச்சினைபற்றி அவரை மிகவும் சிந்திக்க வைத்தன. அதைத் தொடர்ந்து விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, அவர்களுடைய போராட்டங்களில் ஈடுபட்டார். இந்தியப் பொதுவாழ்க்கையில் காந்தி ஒரு சக்தியானுர். டெல்லியில் நடந்த யுத்த மாநாட்டில் கலந்துகொள்ளும்படி வைஸ்ராய் அவருக்கு அழைப்பு விடுத்தார். யுத்த முயற்சிகளில் அரசாங்கத்திற்கு காந்தி ஆதரவு காட்டினுர்.

அவருடைய முயற்சிகள் மக்களிடத்திலே பெரிய அளவில் ஆதரவைப் பெறவில்லை.

ரௌலட் சட்டத்தை எதிர்த்து முதல் ஒத்துழை யாமை இயக்கம் ஆரம்பமாயிற்று. அனைத்திந்திய மட்டத்தில் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடை பெற்றது. மக்கள் அந்தச் சட்டத்திற்கு எதிராக ஆத்திரம் அடைந்து, சத்தியாக்கிரகக் கொள்கை களையும் மீறி, ஆங்காங்கே வன்முறைச் செயல் களில் ஈடுபட்டார்கள், பிரிட்டிஷ் அரசாங்கம் மிருகத்தனமான வன்முறைகளை மக்கள்மீது ஏவி யது. ஜாலியன்வாலா பாக்கில் பிரிட்டிஷ் ஆட்சி யாளர் மக்களைப் பயங்கரமாகப் படுகொலை செய் தார்கள். பஞ்சாபில் நுழைவதற்கு காந்திக்கு அனு மதி மறுக்கப்பட்டது. சத்தியாக்கிரஹப் போர் வன்முறைச் செயல்களாக உருவாவதை விரும்பாத காந்தி, அந்தப் போராட்டத்தை நிறுத்தினர்.

ஜாலியன் வாலாபாக் சம்பவம் காந்தியின் போக்கில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்திய மக்கள் மானத்தோடும் உரிமையோடும் வாழவேண்டுமென்ருல் சுயராஜ்யம் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்கிற முடிவிற்கு வந்தார்.

சுயராஜ்யம் பெற இந்து—முஸ்லீம் ஒற்றுமை அவசியம் எனக் காந்தி கருதினர். முஸ்லீம்களின் உரிமை இயக்கமான கிலாஃபத் இயக்கத்தை அவர் ஆதரித்தார். சிறையிலிருந்த அலி சகோதரர்களை விடுவிக்கப் போராட்டம் நடத்தினர். கதர் இயக்க மும் இந்தச் சமயத்தில்தான் பெரிய அளவில் மேற் கொள்ளப்பட்டது.

1920-ல் ஒத்துழையாமை இயக்கத்தை காந்தி ஆரம்பித்தார். மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, அந்நியத்துணி பகிஷ்கரிப்பு போன்ற திட்டங்களையும் கைக்கொண்டார்.

வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு விஜயம் செய்தபோது அதை இந்திய மக்கள் பகிஷ்கரித்தார்கள். சௌரிச் சௌராவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் காந்தியின் மனதை மிகவும் புண்படுத்தியது. அஹிம்சைப் போர் முறைக்கு மக்கள் தயாராகாத நிலையில் அதைக் கருவியாகப் பயன்படுத்தியது தவறு என்று காந்தி கருதினார். போராட்டத்தையும் உடனே நிறுத்தினார். நேர்ந்துவிட்ட தவறுக்காக உண்ணுவிரதத்தையும் மேற்கொண்டார். சபர்மதி ஆசிரமத்தில் போய்த் தங்கினார். அங்கேதான் இந்தியாவில் முதல் முறையாக அவர் கைது செய்யப்பட்டார்.

நீதிபதியின் முன்னால் தமது நோக்கங்களின் தூய்மையினைக் காந்தி விளக்கிச் சொன்னார். அவற்றை நீதிபதி ஏற்றுக்கொண்டாலும் சட்டப்படி. 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார். எரவாடாச் சிறையிலும் பூனாச் சிறையிலும் தண்டனையினை அவர் அனுபவித்தார். 1924-ஜனவரியில் அவர் நோய்வாய்ப்பட்டார். பூனா ஆஸ்பத்திரியில் அப்பன்டிசைட்டிஸ் நோய்க்காக அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஆஸபத்திரியில் அவரிடம் காட்டப்பட்ட அன்புக்கும் அக்கறைக்கும் அவர் மிகுந்த நன்றி தெரிவித்தார். மருத்துவ சிகிச்சை முடிந்த சில மாதங்களிலேயே

ஹிந்து — முஸ்லீம் ஒற்றுமைக்காக டெல்லியில் உண்ணுவிரதம் மேற்கொண்டார்.

1927ல் சைமன் கமிஷன் நியமிக்கப்பட்டது. அது இந்தியாவெங்கும் பகிஷ்கரிக்கப்பட்டது. அது கொடுத்த அறிக்கையின் பேரில் பிரிட்டிஷ் சர்க்கார் வட்டமேஜை மாநாடு ஒன்றிற்கு ஏற்பாடு செய்தார்கள். காங்கிரஸ் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளாது என்று காந்தி அறிவித்தார். அதோடு இந்தியாவின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் படாவிட்டால் சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்க வேண்டி இருக்குமென்று பிரிட்டிஷ் சர்க்காரை எச்சரித்தார். 1930, மார்ச் மாதம் உப்புச் சத்தியா கிரகம் ஆரம்பமாயிற்று. அந்த மாதம் 12-ந் தேதி ஒரு குழுவிற்குத் தலைமை வகித்து உப்புக் காய்ச்சு வதற்காகக் கடற்கரைநோக்கி காந்தி புறப்பட்டார். வழியில் இருந்த கிராமங்களிலெல்லாம் அவருக்கு மகத்தான வரவேற்புக் கிடைத்தது. அரசாங்கத்தில் வேலை பார்த்த பலர் தங்களுடைய பதவிகளை ராஜிஞமா செய்துவிட்டு அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். ஏப்ரல் மாதம் 6-ம் தேதி தண்டியில் காந்திஜி தமது சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். காந்தியின் சத்தியாகிரகம் தொடர்ந்து, மே மாதம் 5-ம் தேதி அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் நாடெங்கும் வேலை நிறுத்தங்கள் நடை பெற்றன. காந்தி—இர்வின் ஒப்பந்தம் இந்தப் போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. அடக்குமுறை நடவடிக்கைகளை வாபஸ் பெற

வைஸ்ராய் ஒப்புக்கொண்டதன் பேரில் காந்தி தமது போராட்டத்தை நிறுத்தி வைத்தார்.

6 மாதங்களுக்குப் பிறகு நடந்த இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் காங்கிரஸின் பிரதிநிதியாகக் காந்தி கலந்துகொண்டார். அந்த மாநாடு வெற்றி பெறவில்லை. மீண்டும் போராட்டச் சூழ்நிலை உருவாயிற்று. காந்தி மறுபடியும் கைது செய்யப் பட்டார். விசாரணை இல்லாமலேயே சிறையில் வைக்கப்பட்டிருந்தார் அவர். இதனால் நாடெங்கும் பெருங்கொந்தளிப்பு மூண்டது. வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை எதிர்த்துக் காந்தி சிறையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். காந்தியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக பூனா ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. காந்தியின் உபவாசமும் வெற்றி பெற்றது.

விடுதலை செய்யப்பட்ட காந்தி மறுபடியும் கைது செய்யப்பட்டார். சிறையில் மறுபடியும் உண்ணாவிரதம் மேற்கொண்டார். விரைவில் அவர் விடுதலை செய்யப்பட்டார். **1933**, ஆகஸ்டில் மீண்டும் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்ட அவர், மறுபடியும் உண்ணாவிரதம் மேற் கொண்டார். **1934**-க்கும் பிறகு காங்கிரஸிலிருந்து தமது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டு ஹரிஜனங்கள் என்று அழைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினார். காங்கிரஸிலிருந்து அவர் ராஜினாமா செய்தாரே தவிர அவருடைய ஆலோசனைப்படியும் வழிகாட்டுதலின்படியுந்தான் காங்கிரஸ் நடந்து வந்தது.

இதற்கிடையில் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம் களுக்கும் இடையே இருந்த வேற்றுமை அதிகரித்துக்கொண்டே வந்தது. முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, இரண்டு பெரும் சமுதாயங்களிடையேயும் ஒற்றுமையை உண்டாக்க முயன்றார் காந்தி. 1939-ல் ராஜ்கோட் சமஸ்தான விவகாரம் சம்பந்தமாக காந்தி உண்ணா விரதம் மேற்கொண்டார். வைஸ்ராய் நிலைமையைச் சீர்திருத்துவதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் காந்தி உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தது. தனி நபர் சத்தியாகிரகம் பெரும் இயக்கமாக உருவெடுத்தது. 25,000 காங்கிரஸ் காரர்கள் சிறைக்குச் சென்றார்கள். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் மிக முக்கியமான கட்டம் அதிலிருந்து ஆரம்பமாயிற்று.

4

1942-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதி காந்தியும் மற்ற காங்கிரஸ் தலைவர்களும், வெள்ளையனே வெளியேறு என்கிற தீர்மானத்தை நிறைவேற்றியதற்காக, பம்பாயில் கைது செய்யப்பட்டார்கள். காந்தி பூனாவிலுள்ள ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் உறுப்பினர்கள் அகமது நகர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்கள். 1943, பிப்ரவரி மாதம் 10-ம் தேதி காந்தி உண்ணாவிரதம்

மேற்கொண்டார். உண்ணுவிரதத்தின் இரண்டாவது வாரத்தில் அவருடைய நிலைமை கவலைக்கிடமாயிற்று. இந்த நெருக்கடியால் வைஸ்ராயும் நிருவாகக் குழுவிலிருந்த மூன்று உறுப்பினர்கள் ராஜிநாமா செய்தார்கள். மார்ச் மாதம் 3-ம் தேதி உபவாசம் முடிவுக்கு வந்தது. காந்தியின் மனைவி கஸ்தூரிபா, 1944-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் தேதி சிறையிலேயே காலமானுர்.

காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை ஒட்டி இந்தியாவெங்கும் பயங்கரமான கிளர்ச்சிகள் நடைபெற்றன. பல்லாயிரக்கணக்கானேர் சிறை சென்ருர்கள். உயிர்ச்சேதமும் நிறைய ஏற்பட்டது. அரசாங்கத்தின் அடக்கு முறைகளைக் கண்டித்துச் சிறையிலிருந்தபடியே காந்தி வைஸ்ராய்க்குக் கடிதம் எழுதினுர். சிறிது காலத்திற்குப்பின் காந்தி விடுதலை செய்யப்பட்டார். முஸ்லீம் லீக் தலைவரான ஜின்னுவைச் சந்தித்து முஸ்லீம்களுக்குத் தனித்தாயகம் கேட்கும் அவருடைய கோரிக்கையை விவாதித்து சமரசமான முடிவுகாண காந்தி முயன்ருர். பேச்சுக்கள் முறிந்தன. இதைத் தொடர்ந்து அப்போது வைஸ்ராயாக இருந்த வேவல் பிரபு சிம்லாவில் ஒரு மாநாடு கூட்டினுர். காங்கிரஸ், முஸ்லீம் லீக், வேறு சில கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டார்கள். இந்த மாநாடும் வெற்றி பெறவில்லை.

இதற்கிடையில் பிரிட்டனில் தொழிற்கட்சி பதவிக்கு வந்தது. தொழிற்கட்சியின் சார்பாக இங்கிலாந்தின் புதிய பிரதம மந்திரியான ஆட்லி

இந்தியா தனது அரசியல் சட்டத்தைத் தானே நிர்ணயித்துக்கொள்ளச் சம்மதம் தெரிவித்தார். மூன்று பேர்களைக் கொண்ட பிரிட்டிஷ் மந்திரி சபை தூதுக் குழு ஒன்று இந்தியாவிற்கு விஜயம் செய்தது. எல்லாத் தலைவர்களையும் சந்தித்து ஆலோசனை கலந்தது. எல்லாக் கட்சிகளும் ஒரு முடிவிற்கு வராததால் அந்தக் குழுவினரே சமரச யோசனைகளை அறிவித்தார்கள். குழுவினரின் முயற்சியை காந்தி பாராட்டினர். குழுவின் திட்டத்தை முதலில் முஸ்லீம் லீக் ஏற்றுக்கொண்டது. காங்கிரஸ் நீண்ட காலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டதே தவிர, வைஸ்ராயின் இடைக்கால யோசனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்குப் பின் முஸ்லீம் லீக் இரண்டையுமே ஏற்றுக் கொள்ளாமல் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட முடிவெடுத்தது.

வைஸ்ராய் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரான ஜவஹர்லால் நேருவை அழைத்து இடைக் கால மந்திரிசபை அமைக்கச் சொன்னர். அதைத் தொடர்ந்து இந்தியாவெங்கும் வகுப்புக் கலவரங்கள் மூண்டன. பிறகு, லீக் பிரதிநிதிகளும் மந்திரி சபையில் பங்கேற்ருர்கள். இருந்தபோதிலும் வகுப்புக் கலவரங்கள் தொடர்ந்தன.

1947-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ந் தேதி இந்தியாவை விட்டு வெளியேறிவிடுவது என்கிற தங்களது முடிவை பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித் தார்கள். இதைத் தொடர்ந்து கிழக்கு வங்கம், பீஹார், பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகியவற்றில் பயங்கரமான வகுப்புக் கலவ

ரங்கள் நடந்தன. உச்சக் கட்டத்திலிருந்த கிழக்கு வங்காளத்தில் தமது உயிரையும் திரணமாக மதித்து அமைதி ஏற்படுத்தும் சுற்றுப் பய ணத்தைக் காந்தி மேற்கொண்டார். கிராமங்கள் தோறும் சென்று, கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளித்தார். பின்னர், பீஹாரி லும் அதேபோல் ஒரு சுற்றுப்பயணத்தை மேற் கொண்டார்.

இந்தியத் துணைக்கண்டம் இந்தியா, பாகிஸ் தான் என்கிற இரண்டு சுதந்திரத் தேசங்களாகப் பிளவுபட்டது. கலவரங்களின் விளைவாக ஒரு தேசத்திலிருந்த அகதிகள் இன்னொரு தேசத்திற்குப் பெரிய அளவில் சென்றார்கள். மத வெறியால் மிருகங்களாகிப்போயிருந்த மக்களிடத்திலே அமைதி ஏற்படுத்த 1948-ம் ஆண்டு ஜனவரி ஆரம் பத்தில் காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டார். அவர் விரும்பிய பலன் கிடைக்கவே 5 நாட்களில் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ந் தேதி மாலை பிரார்த்தனைக் கூட்டத்திற்குக் காந்தி செல்லு கிற வழியில், மத வெறியன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். ''ஹரே ராம்'' என்கிற வாச கத்தை ஜபித்தபடியே உயிர்விட்டார். இந்தியா வின் வழிகாட்டும் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த காந்தி யின் மரணத்தால் இந்தியா பூராவிலும் சோக இருள் பரவியது. உலக நாடுகளின் கொடிகள் அனைத்தும் அரைக்கம்பத்தில் பறந்து அந்த மகாத்மாவிற்கு அஞ்சலி செலுத்தின.